1779

1779

KALANILAYAM

தனிப்பிரதி விலை அணா 0-2-6.

கலா நிலயம்.

V7. No. 48. 6.12.1934

ட
N211, N33x11
N34-2-48.
177178

1779

KALANILAYAM தனிப்பிரதி விலை அணா 0-2-6.

# கலாநிலயம்

A Literary Weekly

வியாழன்தோறும் வெளிவரும்.

உள் நாடு—வருஷ சந்தா ரூ. 7 0 0
புற நாடு—வருஷ சந்தா ரூ. 9 0 0

காரியாலயம்:—
வேளாளர் தெரு,
புரசைபாக்கம், சென்னை.

OFFICE OF THE REGISTRAR OF BOOKS
21 MAR 1935
MADRAS

Vol 7.] 1934 ஷு டிசம்பர் மீ 6 உ [No. 48

பொருளடக்கம்.

1. தலையங்கம் (Leader) 753
2. தமிழ்ப்பாடம் — (இலக்கணம்) 755
3. கம்பராமாயணம் (அரசியற் படலம்)
T. N. சேஷாசலம் B.A., B.L. 756
4. இரத்னாவளி (அங்கம் 3. களம் 6.)
வடமொழி நாடக மொழிபெயர்ப்பு 758
5. நம்மாழ்வார் வைபவம் (7-ம் பத்து, 2-ம் தசகம்)
K. இராஜகோபாலாச்சாரியார் B.A., B.L. 761
6. தருமன் மாண்பு.
K. T. விஜயராகவாசாரியார் B.A. 763
7. அண்டங்கள்.
E. T. இராஜேஸ்வரி அம்மாள் M.A., L.T. 764
8. வர்த்தமானம் 768

## கலாநிலயம்

### இருவருக் கில்லை யிடம் 2.

**தா**ன் என்ற ஒன்று தனியே உளதென்பதை ஒருபோதும் சிந்தித்த தில்லாமல் உயிர்கொண்டு உழல்பவர், காலிற்கட்டிய சுரைக்காய் அடையாளம் மாறியதால் திகைப்புற்ற அவ்வசடனையே ஒக்கின்றார். தம்முடைய பெயர் தொழில் செல்வம் உடைமை அனைய சில தம்மீது கட்டிக்கொண்டிருப்பவைகளாலன்றித் தம்மை வேறு பிரித்து உணரமாட்டாதவர் இவர். ஆதலாற்றான், இவைகளில் யாதானுமொன்றை இழந்துவிட நேர்ந்தால், இவர், பிறகு, தம்முடையவாழ்க்கையே பாழாகிப்போயிற்றென்று அழிகின்றனர். வேறொன்றும் இருப்பதாக நினைக்காதவர்களுக்கு இது இயற்கையேதான். தாம் கட்டியுள்ள துணி முள்ளில் மாட்டிக் கிழியுமானால், உலகமே அதனோடு அழிந்தொழிவதுபோல் அவர்களுக்குத் தோன்றும். தம் துணி கிழிந்திருப்பதைப் பிறர் கண்டுவிட்டால், அப்புறம் தாமே இல்லாதவர் ஆனால் போல் திகைக்கின்றனர். இப்படியே இதற்கெதிராய நிலையும் ஆம். செல்வமுடைமைக்குரிய அடையாளங்கள் சேர்ந்தக்கால் தருக்கிக் களிப்பவர்களும், அன்னவைகளுக்கு அயலாயவோர் தன்மை தம்மில் உளதென்னும் உண்மையை உன்னாதவர்களே. இன்னவர் மற்றவர்களையும் அவ்விதமே மதிப்பார்களென்பதில் யாதும் ஐயமில்லை. பிறர் அணிந்திருப்பது பட்டாடையோ அல்லது கிழிந்த துணியோ என்பதை உற்று நோக்கி அதற்கேற்றவாறே நடந்துகொள்வார்களல்லது வேறு இவர்நடத்தைக்கு ஒன்று ஆதாரமாயிருப்பது அரிதினும் அரிது. பாரஸீகதேயத்து மன்னவன் வைத்த ஓர் விருந்திற்கு, எளிய உடையுடன் சென்ற புலவர் உமார் கயாம் என்பவரை உள் விட மறுத்தனர். அதன்மேல் இப்புலவர் விலையுயர்ந்த ஆடை அணிகலன்கள் பூண்டு மீண்டும் வருதலும் அங்கிருந்தவர் வரவேற்று உபசரித்து விருந்தளித்தனர். அப்பொழுது, இந்த உமார்கயாம், தன் அங்கியையும் பாகையையும் கழற்றி வைத்து, தன்முன் இட்ட அவ்வுணவுப்பண்டங்களை எடுத்து எடுத்து, "உண் உண்" என்ன அவ்வங்கிக்கும் பாகைக்கும் ஊட்டினார். அதுகண்டு வியந்து அருகிருந்தவர் காரணம் வினவ, "ஐயன்மீர், இவைகளின்றி நான் வந்தபோது வாயில் மறுத்தீர்; பிறகு இவைகளை யணிந்து வந்தவுடன் உபசரிக்கின்றீர், ஆதலின் இவ்விருந்தினிற்கு அழைக்கப்பட்டவை இவ்வாடைகளே ஆதல் வேண்டும். எனின், விருந்து அருந்துதற்கு உரியவை இவைகளே. ஆகையாற்றான், அவைகளுக்கு ஊட்டுகின்றேன்" என்று அந்தப் பாரஸீகப்புலவர் உமார் கயாம் எதிர்விளம்பினாரென்று ஒரு கதை வழங்கி வருகின்றது. இதன் அமைதியை அறிவது அருமையன்று. ஆயினும், ஆடையையே விருந்திற்குவற்றுக் கொள்வதன் காரணத்தை அறியவல்லவர் மிகச் சிலரேயென்றெண்ணுகின்றோம். "உடுக்கும் உடையைக் கொண்டே ஒருவனை மதிக்கின்றதே இவ்வுலகம்" என்று இகழ்கின்றவர்களிற் பெரும் பகுதியினோர், அவ்வாடையை வாங்கி அணிதற்கு இயலாத[illegible]

களாக இருப்பார்கள். இப்படி இகழ்வதனாலேயே, தம்மையும் பிறரையும் மதித்தற்கு வேறோர் அளவை உளதென்பதை இன்னவர் தாம் அறிந்திருக்கின்றனர் என்று எண்ணிவிட வேண்டா. இவர்களும், பிறரை மதிக்கப் புகுங்கால் அவர் அணிந்திருக்கும் ஆடைகளைக் கொண்டே மதிப்பார். தாம் உயர்ந்த ஆடைகள் அணிய நேர்ந்தால், அதுபற்றியே பிறர் தம்மை மதிக்கவேண்டும் என்று எதிர் பார்ப்பவர்களும் இவராவர். தாம் அணிந்திருந்த அங்கி நீங்கியபின் இவர்களும் தம்மை அறிந்துகொள்ளமாட்டாமல் திகைப்பார். வேறென்; மிகுதிபற்றிக் கூறுங்கால், இவ்வுலகத்தில் எல்லாருஞ் சுரைக்காய்க் காலர்களே; ஆகையாற்றான் மானுட நடமாட்டத்தில் சுரைக்காயோடு சுரைக்காய் தடுக்கித்தடுக்கி விழவேண்டி வருகின்றது. தான் கட்டிய அச்சுரைக்காயே தான் என்றும், பிறர் கட்டிய சுரைக்காயே பிறர் என்றும் ஆனபின், மனிதனது சிந்தனையெல்லாம் சுரைக்காய்மயமே யாகிவிடுகின்றது. தன்சுரைக்காய் போய்விட்டதானல் தானே போய்விட்டதாகப் பாவித்து மாழ்குகின்றான். பிறர் சுரைக்காயையும் தான் கவர்ந்துகொள்ளக் கூடுமானல் தன்னை இருமடங்காக மதித்து மகிழ்கின்றான். மனிதர் எத்தனைபேர் இருந்தாலும் இவ்வுலகினில் இடமுளது. ஆயினும், சுரைக்காய்க் காலிகள் இருவர் இருப்பதற்கோ இங்குச் சற்றேனும் இடமில்லை. இவ்வுலகத்தை உழக்கும் அல்லலின் பெரும்பகுதிக்கோர் முக்கிய காரணம் இவ்விரகசியத்தினுள் காணலாம். தன் காலில் உள்ள சுரைக்காயை அவிழ்த்துக் கட்டிக்கொள்ள வேறொருவன் இருக்கும் வரையில் தீராத் திகைப்பு விளைந்துகொண்டே இருக்கும். இகலுடைய நெஞ்சினர்களா யிருப்பதற்கெல்லாம் காரணம் இதுவே. சுரைக்காயை அவிழ்த் தெறிந்துவிட்டுப் பிறகு ஒவ்வொருவரும் தம்மைச் சோதித்துக் கொள்ளத் தலைப்படுவார்களாயின், அல்லலுக்கு ஆதாரமாகிய ஆரவாரங்களிற் பல தாமே ஒடுங்கிவிடும். இக்காலக் கூக்குரல்கள் பல பின்னர்ப் பண்ணமைந்த இன்னிசைகளாக மாறினும் மாறலாம். அதுகாறும் மனித அவத்தையினின்று தப்புமாறில்லை. தற்காலம் சுரைக்காயை அவிழ்க்கச்சொல்கின்ற சான்றோர்களும், அவிழ்ப்பதற்குவேண்டிய முறைகளைச் செய்தமைத்துத் தருகின்ற நல்லவர்களும் மிகமிகக் குறைந்த தொகையினர்களே. இதனை இயம்புவோர் குரல் முன்னேற்றமுறைப்பாடுகளைப்போ லல்லாமல், மிகமிக மெல்லியதாகவே இருப்பது இயற்கையாதலின், மேலெழுந்து கேட்கமாட்டே னென்கின்றது. கேட்டாலும், முன்னேற்ற முழக்கங்களால் செவிடுபடத் தூர்ந்திருக்கும் செவிகளுக்குள்வாயில்பெறுமல்போவதொன்றும் புதுமையன்று.

எனின், தானென்னும் ஒன்று தனியே இருக்கின்றதென்னுந் தன்மையை அறிந்துகொண்ட நிலையே, தன்னறிவுபெற்ற நிலையாம். இந்நிலையினால் எய்தும் நன்மைகள் பலப்பல. தன்னினும் அருமையும்பெருமையும் வாய்ந்தது பிறிதொன்றில்லையாதலின், பின், "இனிதுண்ணேம், ஆரப்பெறேம்" என்னக் கண்பாமல் கலங்கவேண்டுவதில்லையே; இல்லாமைக்கு இரங்காமைபோன்றே, தன் உடைமைகளைக் கொண்டு செருக்கவேண்டுவதுமில்லை; பிறர் உடைமைகளைக்கண்டு அழுக்காறு அடையவேண்டுவதும்இல்லை. இன்னபடி, எல்லாவற்றையுங் கடந்து தன்னிலையில் நிற்பதொரு அமைதியை எய்துவிக்கும் நலத்தது அவ்வறிவு.

தன்னை யறிகின்ற அறிஞர்தம் தன்மை அன்னதாக, இனி, தம்மைத் துறப்போர் திறத்தினைச் சிறிதிங்கு நோக்குவோம். மாதர் மக்கள் தரணி இல்லம் தனம் மானம் முதலியவைகளைத் துறத்தல், தன்னையே துறத்தல் என்னலாகாது. தன்னைத் தனியே அறிந்து நிறுத்திக்கொண்டு, தன்னையே இறுகப்பற்றி, தன்னின் பொருட்டு ஏனையவைகளை விட்டுவிடுதலேயாம் அத்துறவு. இந்தத் துறவு கைவருதற்கு முன்னர்க் கூறிய தன்னறிவு பெரிதும் ஆதாரமா யிருக்கும். தன்னையுந் துறக்குந் தன்மை இதனின் வேறாய தொன்றாம். ஏனையவைகளைத் துறப்பதற்கு அறிவு ஆதாரமாக, தன்னையுந் துறக்குமித்தன்மைக்கு அன்பே ஆதாரமாதல் வேண்டும். "தன்னையுந் துறக்குந் தன்மை காமத்தே தங்கிற்றன்றே" என்றனர் கம்பர். இத்துறவினை, தற்காலம் பரக்கப் பேசப்படும் 'தன்னலம் மறுத்தல்' (self-sacrifice) என்னுங் கருத்தினோடுமயங்கலாகாது. ஏனெனில், இப்பின்னையது, தன் 'நலத்தினை' த்துறக்குமாறு கூறுகின்றதேயன்றி தன்னையே துறக்குந் தன்மையைத் தெரிவிக்கவில்லை. இத்தன்னலம் மறுத்தலுக்கும் அனுபுதானே சார்பு என்பார். ஆம், அது உண்மையே. ஆயினும், இதனால் அன்பு செய்யவே படுகின்றது. அன்பு செய்யப்படுமாயின், அது அறஞ்செய்வார்க்குந் துணையாகலாம், மறஞ்செய்வார்க்குந் துணையாகலாம். "அறத்திற்கே யன்பு சார்பென்பர் அறியார், மறத்திற்கும் அஃதே துணை" என்று திருவள்ளுவர் கூறுவதும், அதற்கு மணக்குடவர், "அன்பானது அறஞ் செய்வார்க்கே சார்பாம் என்பர் அறியாதார், அவ்வன்பு மறஞ்செய்வார்க்குந் துணையாம்" என உரை எழுதுவதும் அக்கருத்தினை வலியுறுத்துகின்றன. இவ்விடயம் ஆழ்ந்து சிந்தித்தற் குரியது. எனினும் இப்பொழுது விரித்துரைக்க நினைக்கவில்லை; வேறோர் அமயம் ஆராய்ந்து விளக்குவோம். அன்புடைமையைத் திருவள்ளுவர் அன்புசெய்கையினின்று வேறு பிரித்து உணர்ந்து அவ்வேற்றுமையை இக்குறளினால்விளக்குகின்றார் என்னுமளவு இப்பொழுதிங்குத் தெரிந்துகொண்டால் போதும்.

தன்னையே அனைத்துமாய்க் காண்கின்ற காட்சியே அன்புடைமையின் வைபவமாகின்றது.இதுவோ செய்கையைக்கொண்டு அளக்கத்தக்கது ஒன்று அன்று. "யார் அது?" என்று கேட்கின்ற குரலிற்கு, ("நான் தான்" என்று அல்லாமல்) "நீ தான்" என்று எதிர் கூறுவது இதன் குணம். அப்பொழுது, தானென்றும், மற்று, தன்னால் அன்புசெய்யப்படுபவரென்றும் தனித்தனி நிலைகள் இல்லை. இப்பொழுதே எல்லாம் தன்மயமாய்த் தோன்றுகின்றது. இதனையே அன்புமயம் என்றாலும் பொருள் [illegible] அன்பு உடைமையின் இலக்கணம். உட[illegible]

199198
82
m211,N28KN
N34.7.48.



மையாக உய்யவேண்மோயின், மானுடப்போராட்டங்களெல்லாம் நிரந்தரம் மாயவேண்டுமாயின், வானேருலகு வையகத் திறங்கவேண்டுமாயின், மனமானது இந்த நன்னிலை எய்துவதற்கு எம்முயற்சிகள் ஏற்புடையவைகளோ அவைகளே செய்யப்படுதல் வேண்டும். இதற்கெதிர், அன்பு செய்கைக்கு ஆதாரமாகியவைகளை விளம்பரம் செய்வதாற் பயனில்லை; தீதுமுளதாகலாம். "உன்மாட்டு யான் அன்புசெய்ய வருகின்றேன், அவ்வன்பு சார்பாக அறஞ்செய்யவருகின்றேன்" என்று புறப்படுவ தனைத்தும், அல்லலுக்கே இவ்வுலகை இரையாக்கும் என்பதை, எத்தனை முறை எத்தனைவகையெடுத்துக்காட்டினும் அது மிகையாகாது. ஒருவர் என்ன, கோடி கோடி மக்கள் ஒன்றுகூடி வாழ இயலும்; மற்று, இருவர் என்ன இரண்டுபோர், அவர்தாம் ஒருவருக்கொருவர் எத்துணைதான் அன்புசெய்துகொள்ள ஆயத்தமாயிருந்தாலும், வசிப்பதற்கு இவ்வுலகில் இடம் இல்லையே.

அன்புடைமைக்கு ஆதாரமானவைகளைப் பற்றித் தொடர்கின்றது இக் கலாநிலயம். அன்புசெய்கையை விளம்பரங்கள் செய்வார் பிறர் பிறர் எத்தனையோ பலர் உளராதலின், நம் கலாநிலயம் வாழ்க்கையின் ஆழத்தில் பின்னுஞ்சிறிதுஇறங்கி அன்புடைமைக்கு மக்களை அழைக்கும் கடமையைக் கண்டுகொண்டு அன்னதற் குரியவைகளையே இயம்பியும் இழைத்தும் வருகின்றது. இந்த வேற்றுமை வெளிப் பார்வைக்கு எட்டுவது அருமை. ஆதலாற்றான், இதன் "நோக்கம்" யாதென ஐயுறுகின்றார் சிலர்; இதன் "போக்கே ஒருபோக்கு" என்று வியக்கின்றார் சிலர். அவ்வையமும் இவ்வியப்பும் தெளிவதற்குஉரியஇரகசியம்இவ்வுண்மையில் அடங்கியிருக்கின்றது.

மற்று, இம்மனநிலை வாய்ப்பதற்கமைந்த சாதகம், காவியக்கலையின் பயிற்சியே, இக்காலத்திற்கு ஏற்றதெனக் கலாநிலயம் கொண்டிருப்பதற்குரிய காரணங்கள் இவ்விதழ்களில் பற்பல விதங்களில் விளக்கப் பெற்றிருக்கின்றன. வேறொன்றுங் கருதாமல், மற்றவையெல்லாம் இருக்குமாறு இருக்கட்டும் என்று விட்டுவிட்டு இலக்கியப் பயிற்சியில் இறங்குவார்களாயின், பத்து அல்லது பன்னிரண்டு ஆண்டுகளுக்குள் பெரும்பெரும் நற்பயன்களை எல்லாத் திசைகளிலும் காணலாமே. இம்மையிற்றானே இருமை நீங்கிய இன்ப மெய்தலாம்.

---

## தமிழ்ப்பாடம் 148.

[747-வது பக்கத் தொடர்ச்சி]

### இலக்கணம்

லகர மெய்யீறு.

நிலமொழி யீற்று லகரமெய் வருமொழி முதல் இடையின மெல்லின வல்லின மெய்களோடு எவ்வாறு புணரும் என்பதை இனிக் கற்போம்.

I நிலைமொழி யிறுதியில் லகரமெய் + வருமொழி முதலில் இடையின மெய்.

மொழிமுதலாக நிற்கக்கூடிய இடையின மெய்கள், யகரமும் வகரமும் ஆகிய இவை இரண்டே.

(a) நிலைமொழி யிறுதியில் லகரமெய்யும் வருமொழி முதலில் யகரமெய்யும் நிற்குமானல், யாதும் விகாரமின்றிப் புணரினும் புணரலாம், அல்லது ஒரு இகரம் தோன்றினுந் தோன்றலாம்.

கல் + யானை = கல்யானை, கல்லியானை.

அகில் + யாது = அகில்யாது, அகிலியாது.

(d) நிலைமொழி யிறுதியில் லகரமெய்யும் வருமொழி முதலில் வகர மெய்யும் நிற்குமானல் யாதும் விகாரமின்றி இயல்பாய்ப் புணரும்.

வில் + வளைத்தான் = வில்வளைத்தான்.

அகல் + விளக்கு = அகல் விளக்கு.

சொல் + வேந்தே = சொல் வேந்தே.

கொல் + வேங்கை = கொல் வேங்கை.

வாயால் + விழுங்கு = வாயால் விழுங்கு.

II நிலைமொழியிறுதியில் லகரமெய் + வருமொழி முதலில் மெல்லின மெய்.

மெல்லினமெய்கள் ஆறினுள் மொழிக்கு முதலில் வருவன, ங ஞ ந ம என்னும் இவை நான்கு. இவைகளில், ஙகரமெய்யை முதலாகவுடைய சொல் 'ஙனம்' என்னும் ஒன்றே. அதுவும், அங்ஙனம் இங்ஙனம் எங்ஙனம் யாங்ஙனம் என, சுட்டு அல்லது வினு எழுத்துக்களுடன் சேர்ந்தே வரும். எனின், நாம் இங்குக் கருதவேண்டிய வருமொழிமுதலெழுத்துக்கள், ஞ ந ம என்னும் மூன்று. இவைகளில், ஞகர மகரங்களை ஒன்றாகவும், நகரத்தைத் தனியாகவும் எடுத்துக்கொள்ள வேண்டும்.

(a) நிலைமொழி யிறுதி லகரமெய் + வருமொழி முதல் ஞகர மகரங்கள்.

நிலைமொழி யிறுதியில் லகரமெய்யும் வருமொழி முதலில் ஞகரம் அல்லது மகரம் நிற்குமானல் எல்லாத்தொடர்களிலும், நிலைமொழியீற்று லகரமெய் னகரமெய்யாகத் திரியும்.

முகில் + மூண்டது = முகின்மூண்டது—எழுவாய்த் தொடர்.

வில் + முறித்தான் = வின்முறித்தான்—இரண்டாம் வேற்றுமைத் தொகை.

தோல் + முரசு = தோன் முரசு—மூன்றாம் வேற்றுமை உருபும்பயனும் உடன்தொக்க தொகை.

வாளால் + மாய்த்தான் = வாளான் மாய்த்தான் — மூன்றாம் வேற்றுமைத் தொகாநிலைத் தொடர்.

அகில் + மணம் = அகின்மணம்—ஆறாம்வேற்றுமைத்தொகை.

பகல் + ஞாயிறு = பகன் ஞாயிறு—ஏழாம் வேற்றுமை உருபும் பயனும் உடன்தொக்கதொகை.

(b) நிலைமொழி யிறுதியில் லகர மெய் + வருமொழி முதலில் நகரமெய்.

i நிலைமொழி லகரமெய்யை ஈற்றிலுடைய இரண்டெழுத்துச் சொல்லா யிருந்து, அவ்விரண்டு எழுத்துக்களினும் முதலெழுத்துக் குறிலாகவும் இருக்குமானல், வருமொழி முதலில் நகரம்வர—நிலைமொழியீற்று லகரமெய் வருமொழி முதல் நகரமெய் ஆகிய இவை இரண்டும் னகரமெய்யாகத் திரிந்துவிடும்.

கல் + நாய் = கன்னாய்—மூன்றாம் வேற்றுமை உருபும் பயனும் உடன் தொக்க தொகை.

சொல் + நயம் = சொன்னயம்—ஆறாம் வேற்றுமைத் தொகை.

நில்+நீ=நின்னீ— வினைமுற்றுத் தொடர்.
பல்+நெகிழ்ந்தது=பன்னெகிழ்ந்தது—எழுவாய்த் தொடர்.

ii. நிலைமொழி இரண்டெழுத்திற்கு மேற்பட்டதாகவேனும், அல்லது இரண்டெழுத்து உடையதாயின் முதலெழுத்து நெடிலாகவேனும் இருக்குமாயின் வருமொழிமுதல் நகரமெய்,னகரமெய்யாகத்திரிவதுடன் நிலைமொழியீற்று லகரமெய் கெட்டுவிடும்.

கால்+நாழிகை=கானாழிகை.
வால்+நரம்=வானரம்.
அகல்+நிலம்=அகனிலம்.
புகல்+நீ=புகனீ.

குறிப்பு:—இவ்வகையில் லகர மெய்யீறு, னகர மெய்யீற்றை நிகர்க்கும்.

---

# கம்பராமாயணம்

## கிஷ்கிந்தா காண்டம்—8. அரசியற் படலம்

[744-வது பக்கத் தொடர்ச்சி]

குருவினும் விஞ்சிக் கோற்றங் கோண்டிலன்.

பொய்யும் புகலப் புக்கவோர் மாயத்தால் தன்னை 'மனிசன்' என்று நிறுவிக்கொண்ட இராகவன், இனி, தான் சொல்லநினைத்த உறுதிகளைச் சுக்கிரீவனுக்குச் சொல்லலுற்றான்:—

வாய்மைசா லறிவின் வாய்த்த
மந்திர மாந்த ரோடுந்
தீமைதீ ரொழுக்கின் வந்த
திறத்தொழின் மறவ ரோடுந்
தூய்மைசால் புணர்ச்சி பேணித்
துகளறு தொழிலை யாகிச்
சேய்மையோ டணிமை யின்றித்
தேவரிற் றெரிய நிற்றி

[வாய்மையோடு கூடிய அறிவினாற் சிறந்த மந்திரிகளுடனும், குற்றமற்ற ஒழுக்கத்தால் பெற்ற திறமைவாய்ந்த வீரர்களுடனும், தூய்மையான உறவுகொண்டு, நிந்தனையற்ற செய்கைகளைச் செய்பவனாய்,அவர்கள்உன்னைவிட்டு அதிகம் அகலாமலும் அதிகம் நெருங்காமலும், உன்னை அவர் ஒரு தேவனைப்போல் மதிக்கும்படி நிற்கக்கடவாய்] என்றனன். முதலிற் சொன்னவை முற்றுந் தக்கவே. ஈற்றுஅடியிற்றான் இராஜதந்திரம்வந்துசேர்கின்றது. அன்னவை வரும்போ தெல்லாம் திருவள்ளுவரும் உடனுடன்வந்து உதவிநிற்பார். உண்மையில் இது, வாலி முன் சுக்கிரீவனுக்குச்சொல்லிவிட்டதன் தொடர்ச்சியே. சுக்கிரீவனுக்கு இத்தகைய உலக உபாயங்கள்போதும். வசிட்டன் இதனை இராமபிரானுக்குக் கற்றுத்தந்ததில்லை. ஆயினும், நல்லமைச்சரின் அவசியத்தை அம்முனிவர் இயம்பியதை மறவாமல் இராமன் சுக்கிரீவனுக்குச் சொல்லிவைத்தான். உபாயம் பின்னும் உயர்கின்றது.

புகையுடைத் தென்னி னுண்டு
பொங்கன லங்கென் றுன்னும்
மிகையுடைத் துலக நூலோர்
வினயமும் வேண்டற் பாற்றே
பகையுடைச் சிந்தை யார்க்கும்
பயனுறு பண்பிற் றீரா
நகையுடை முகத்தை யாகி
இன்னுரை நல்கு நாவால்

[புகை இருக்கின்றதென்றால் அங்கு எரிகின்ற நெருப்பு இருக்கின்றதென்றுமேலும் ஊகித்துத் தெரிந்துகொள்ளலாம் என்று தருக்கம் முதலிய உலக நூல்களில் வல்லவர் கூறும்வண்ணம், பணிவும் வேண்டப்படுவதேயாம். பகைகொண்ட மனத்தையுடையவர்க்கும், அவரவர் தன்மைக்கேற்றபடி அவர்களால் வரக்கூடிய பயனை இழக்காமல், சிரித்தமுகத்தனாகி நாவினால் இனிய சொற்களையே பேசக்கடவாய்]

என்னச்சாற்றினான். இராமபிரானது பெருமையைக் கருதி 'வினயம்' என்பதை 'விநயம்' என்னும் வடமொழியின் விகாரமாகக்கொண்டு 'பணிவு' அல்லது 'மரியாதை' (Courtesy) என்றபொருள் இணைக்கப்பெற்றது. அவ்வாறின்றி 'வஞ்சனை' என்ற பொருளையே கொண்டுவிட்டால், இவ்வுபாயத்தின் உக்கிரம் வெகுதூரம் சென்று, அர்த்தசாஸ்திரம் (பொருட்பால்) வல்ல உலகநூலோர் உரைக்கின்ற 'வஞ்சனையும்' அரசருக்கு வேண்டியதுதான், என்று இராமன், வடநூல் சாணக்கியருக்கும் இத்தாலிநாட்டு மாக்கிவில்லிக்கும் தன்னுடைய கணையாழியைக் கொடுத்தபடிமுடியும். அது எவ்வாறாயினும் சிரித்துச் சிரித்துக் குடியைக் கெடுக்கின்ற உபாயம் இது என்பதிலேனும், "பகைநட்பாங் காலம் வருங்கால் முகநட்டகநட் பொரீஇ விடல்," என்றும், "மிகச்செய்து தம் மெள்ளுவாரை நகச்செய்து நட்பினுட் சாப்புல்லல் பாற்று" என்றும் மொழிகின்ற திருக்குறள் நீதிகளையே ஆதாரமாக உடையதென்பதிலேனும் ஐயம் இல்லை. இக் குறளின்கீழ், பரிமேலழகர், "அகனென்று புறனென் றுதல் ஒருவற்குத் தகாதெனினும் பகைவர்மாட்டாயிற் றகுமென்பது நீதிநூற்றுணிபென்பார் அதன்மேல் வைத்துக்கூறினார்" என உரைத்திருக்குமது சாலச் சுவையுடைத்து. அறத்துப்பால் வரைந்துள்ள உத்தமர் இத்தகைய வஞ்சனை பேசலாமோ என்னும் அச்சம் பரிமேலழகருக்கே பிறக்கின்றது. ஆதலின் வள்ளுவரைக் காக்கும்வண்ணம் இவ்வுரையாசிரியர், வள்ளுவருக்கு முன்னிருந்த நீதிநூல் துணிபுகளையே அவர் கூறினார் என்று வற்புறுத்தமுயல்கின்றனர். மற்று, வள்ளுவரோ அவ்வண்ணம் நீதிநூல் ஒன்றையும் தான் ஆதார்மாகக் கொண்டு இவ்வஞ்சனையைச் செப்புவதாக இக்குறள்களியம்பினார் அல்லர். ஆதலால் 'அவாய் நிலை' என்னுந் தந்திரத்தால் உரையாசிரியர்தாமே 'அரசநீதி' என்பதை வருவித்துக்கொண்டு பிறகு திருவள்ளுவருக்கு உதவி செய்தவாறும் இது. 'பாற்று' என்பது எழுவாயின்றி நிற்கின்றதால் பரிமேலழகருக்கு இந்தச் செவ்வி வாய்த்தது, உண்மையே; எனினும் அதிகார முறைமையின்படி, "கூடாநட்பு...பாற்று" என்ன நேர்மையுற முடிவு கூடுமே. இந்தப் பரிமேலழகர் இங்கு அவாய்நிலையாய் நிறுத்திய நீதிநூற்றுணிபையே பற்றுக்கோடாக ஏற்றுக்கொண்டு "மிகையுடைத் துலகநூலோர் வினயமும் வேண்டாற் பாற்றே" என இராமன் சுக்கிரீவனுக்குச் சாற்றுவானாயினன். அல்லது 'விநயம்' எனக் கொண்டக்கால், "சொல் வணக்கம் ஒன்னார்கட் கொள்ளற்க வில்வணக்கந் தீங்கு குறித்தமையான்" என்ற குறளின் எதிர்சார்பாக, "வில்லின் வணக்கம்போல் நீ தீங்குசெய்யுமாறு உன் பகைவரை வணங்குக" என்னும் கருத்தும் எளிதில் எய்தும் மனஞ்சேராமல் "நாவால் இன்னுரை நல்கு" என இராகவன் பொய்ம்முறையில் மிகத் தேர்ந்து கூறுகின்றதை நோக்குங்கால், இந்தச் சுக்கிரீவனுக்கு ஏற்றபடியே உறுதி கூறப்புக்கதால் அன்றோ இராமன் கதி இந்நிலைய தாயிற்று என்று பரிய வேண்டி நேர்கின்றது. "யாரோடும் பகை கொள்ளிலன் என்றபின் போரொடுங்கும் புகழொடுங்காது" என்று வசிட்டன் தனக்குச்சொன்ன மேலான அறத்தையோ இராமபிரான் சுக்கிரீவனுக்குச் சொல்லமாட்டாதவனாக இருக்கின்றான். ஆகையால், "நீ வஞ்சனைகள் செய்தேனும் வாழ்க" என்ற 'உறுதி' இராமபிரானது வாய்நின்று வருகின்றது. சீதையைப் பிரிந்தபின் இவன் செய்த தொன்றோ! இம்மொழியை இவனும் தன்னுடைய 'நாவினாலேயே' நல்குகின்றான் என்று நம்புவோம்.



இனிவருமிரண்டுஉறுதிகள் நம்முடைய மூச்சை அத்துணைக் கவர்வனவல்ல. கூறுவான் இராமன்:

தேவரு மருடற் கொத்த செயிரறு செல்வ மஃதுன்
காவலுக் குரிய தென்று லன்னது கருதிக் காண்டி
யேவரு மினிய நண்ப ரயலவர் விரவா ரென்று
மூவகை யியலோ ராவர் முனைவர்க்கு முலகமூன்றின்

[தேவர்களும் மயங்குவதற்கு ஒத்த குற்றமற்ற பெருஞ்செல்வம் இது உன் காவலுக்கு உரியதாயிற்று என்றால் அதனை மனதிற் கொள்வாயாக. எவ்வகைமுயற்சியில் ஈடுபட்டிருப்பவர்க்கும், மூன்று உலகங்களிலும் இருப்பவர், இனிமையான நண்பர் என்றும், நொதுமலர் என்றும், பகைவர் என்றும் மூன்றுவகையில் பிரித்து நடத்தவேண்டிய தன்மையராவார்.]

ஆதலால் அனைவரிடத்தும் ஒருபடித்தாக ஒழுகலாகா தென்பது இப்பாசுரத்தின் சூழ்ச்சி. மனிதர், ஒருவனுக்கு மூவகை இயல்பினராகப் பிரிந்து தோன்றலாம் என்பது உண்மையே; ஆயினும் இது மெய்ம்மையன்று. பிரிப்பதெல்லாம்பொய் என்பது தத்துவ உணர்வுடையோர்க்குப் பழையதோர் செய்தி.

செய்வன செய்தல் யாண்டுந் தீயன சிந்தி யாமல்
வைவன வந்த போதும் வசையில வினிய கூறன்
மெய்சொலல்வழங்கல்யாவுமேவினவெஃகலின்மை
உய்வனவாக்கித்தம்மோடுயர்வனவுவந்துசெய்வாய்

[எவ்விடத்திலும் தீயகாரியங்களை நினைக்காமல்,செய்யவேண்டியவைகளைச் செய்தலும், மற்றவர்களை வையக்கூடிய சந்தர்ப்பங்கள் நேர்ந்தபோதும் வைதிடாமல் இனிய வார்த்தைகளையே சொல்லுதலும், பிறர் கேட்டவைகளையெல்லாம்கொடுத்துவிடுதலும், மற்றவர்கள் விரும்பிவைத்திருப்பவைகளை அபகரிக்காமையும், ஆகிய இவை, மனிதரை உய்வித்துத்தம்மளவுஉயர்விக்கவல்லனவாம். ஆகையால், அவைகளை உவந்து செய்யக்கடவாய்.]

சுக்கிரீவன் திகைத்திலின்றிக் கேட்கக்கூடிய பொது தர்மங்களே இவை. இனி விலக்குக்கள் சில கூறுகின்றான் இராமன்:—

சிறியரென் றிகழ்ந்து நோவு
செய்வன செய்யன் மற்றிந்
நெறியிகந் தியானோர் தீமை
யிழைத்தலா லுணர்ச்சி நீண்டு
குறியதா மேனி யாய
கூனியாற் குவவுத் தோளாய்
வெறியன வெய்தி நொய்தின்
வெந்துயர்க் கடலின் வீழ்ந்தேன்.

[திரண்ட தோள்களையுடையவனே, எளியவர் என்று இகழ்ந்துவருத்தத்தைத்தருஞ்செய்கைகளைச்செய்யாதே. நான் இந்த நெறியைக் கடந்து ஒரு தீங்கு செய்ததால், நீண்ட நினைவும் குறுகிய வடிவமும் உடைய கூனியினால் வறுமைகளையடைந்து எளிதில்கொடிய துன்பக்கடலில் விழுந்தேன்.]

இந்த இதோபதேசமும் சுக்கிரீவனுக்கு ஏற்றதே. "கூனுஞ் சிறிய கோத்தாயும் கொடுமை யிழைப்பக் கோல்துறந்து கானுங்கடலுங் கடந்து இமையோர் இடுக்கண் காக்க வந்த" எம்பெருமான் தன்னையே அந்நீதிக்கு உதாரணமாய் எடுத்துக்காட்டுவதுதான் சிறிது சிரிப்பு விளைவிக்கின்றது. அவ்வாறே,

மங்கையர் பொருட்டா லெய்தும்
மாந்தர்க்கு மரண மென்றல்
சங்கையின் றுணர்தி வாலி
செய்கையாற் சாலு மின்னும்
அங்கவர் திறத்தி னானே
யல்லலும் பழியு மாதல்
எங்களிற் காண்டி யன்றே
யிதனின்வே றுறுதி யுண்டோ

[மாதர் நிமித்தமாக மனிதருக்கு மரணம் நேரும் என்பதைச் சந்தேகமில்லாமல் உணர்ந்துகொள். இதற்கு வாலியின் செய்கையேபோதும். அன்றியும் மங்கைபொருட்டே துன்பமும் பழியும் சேரும் என்பதை எங்கள் விஷயத்தில் கண்டாயன்றோ. இதனைவிட உறுதியானது ஒன்று உண்டோ]

என்பதும் அவ்வகைத்தே. இத்திறத்து மங்கையர் என்னாது பொதுப்படப் பழிகூறிய இதன் பொருள் சங்கையற விளங்கிற்றில்லை. முன்,

தூம கேது புவிக்கெனத் தோன்றிய
வாம மேகலை மங்கைய ரால்வருங்
காம மில்லை யெனிற்கடுங் கேடெனும்
நாம மில்லை நரகமு மில்லையே

என வசிட்டன் இராமனுக்கு அறிவுறுத்தியபோது, மங்கையரால் வருங் காமத்தையே அஞ்சும்படி கூறினான். வாலியைக் காட்டியவளவு, இராமன் எண்ணியபடி, காமத்தால் அடைந்த கேட்டிற்கு உதாரணமாகலாம்.பின்னர், தங்களிற்காணச்சொல்வதுதான் எது என்னல் எளியதன்று.இவ்விடயம் முழுவதும், 'மங்கையர்பொருட்டால்' என்றும் 'மங்கையர் திறத்தினான்" என்றும்,பொதுப்படக்கூறிஇருப்பதனாலும் காமத்தாற்கெட்டவன் இராமன் அல்லனாதலாலும், "மங்கையர் என்னும் நாமம் இல்லையேல், பின் மரணமும் அல்லலும் பழியும் இல்லை" என்னவே சாதிக்கப்புகுகின்றான்போல் தோன்றுகிறது. சுக்கிரீவன் என்னதான் கல்விகேள்விகள் குறைந்த வொரு குரங்காயிருப்பினும், மிக்க எண்ணத்தால் தெருட்சிபற்ற மனத்தனாயினும், இராமபிரான் இப்படி அவன் மாட்டும் வாய்வந்தன எஞ்சாமற் கூறல் அழகன்று. கொடுமைகூர் கூனியையோ, கோளிழைத்த கைகேசியோ, மோகம் முதிர்ந்த சூர்ப்பனகையோ, தடுத்தும் கேளாமல் வனமும் உடன்மேவி மாயமானும் வேண்டி இலக்குவனையும் அடாது கூறி அகற்றிய சீதையையோ, அல்லது அயோமுகியையோ, இங்கிவர்களில் யாரையோ எண்ணி "மாதர் திறத்தினால் அல்லலும் பழியும்" தமக்கு ஆயிற்றென்று சுக்கிரீவனைக்

காணச்சொல்கின்றான். இவையெல்லாம், "விதியின் பிழை இதற்கென்னை மங்கையர்களை வெகுள்வது"! எவ்வாறாயினும், மங்கையர் இராமனுக்கு இழைத்த தீமைகள் என்ன இவைகளைச் சொன்னாற்சொல்லலாமேயன்றி மங்கயர் "பொருட்டு" (அல்லது திறத்தினால்) இராமன் பிழைசெய்து அதனால் பழியும் அல்லலும் தனக்கு ஆக்கிக்கொண்டான் என்பதுவோ ஒருபோதும் ஒண்ணாது. சூர்ப்பணகையின் காமத்திற்கு இராகவன் இணங்கி அதனால் அரக்கர்பகை சூழ்ந்திருக்குமாயின் அப்பொழுதே, "மங்கையர் திறத்தினானே அல்லலும் பழியுமாதல் எங்களிற்காண்டி" என்பது ஏற்புடைத்தாகும். இராவணன் கெட்டது சூர்ப்பணகையால், ஆகலாம்: மற்று, சூர்ப்பணகையின் பொருட்டோ அன்று; சீதையின் பொருட்டால் கெட்டான்; ஆயினும்அதுவோ சீதையின் பிழையன்றே. ருமையை வாலி வௌவியது உண்மையாயின், மங்கையர்பொருட்டு மரணமடைவதற்கு வாலியும் சான்றாவான். மற்று, இவ்வளவோடு இராமன் நின்றிருப்பானாயின், "மங்கையரால் வரும் காமம் இல்லையெனிற் கடுங்கேடு எனும் நாமம் இல்லை' என்ற வசிட்டன்வாசகத்திற்கு இராகவன் கூற்றும் முறைபடப்பொருந்தியிருக்கும். ஆனால், இராமனோ அதன்மேலும் பலபடி ஓங்கிச்சென்று, "மங்கையர் என்று இருப்போரெல்லாம் அல்லலும்பழியும்ஆக்கி வைப்பார்" என்னப் பின்னர் வரம்பின்றிக் கூறுவது தான் உலகமலைவாய் நிற்கின்றது. வாலி ருமையின் பொருட்டு ஒருகால் மரணமடைந்திருக்கலாம்; ஆயினும் என்?-தாரைதடுத்ததற்குஉடன்பட்டிருப்பானாயின் மரணமடையாமல் இனிது காக்கப்பெற்றவனுமாகலாம். "மங்கையாற்றான் வாழ்ந்தேன்நான்" என்னற்குச் சத்தியவானின் செய்தியே சாலும். கைகேசி பின்னர்க் கொன்றாள்எனினும் தயரதனை முன்னர்ச் சம்பரப் போரில் காத்தவள் இவளே. இவ்விடயங்களின் உண்மைத்தன்மையை உணர்ந்தபின், "மங்கையர் திறத்தினானே அல்லலும்பழியும் ஆதல் எங்களிற் காண்டி" என்று இவ்விராகவன் அறிவுறுத்த நினைப்பதுதான் யாதெனத் தெரிந்தபாடில்லை. வசிட்டன் சொன்ன அப் பெண்மோகத்தையோ பேசினானல்லன், நிச்சயம்; அது இந்தச்செய்யுளின் முன்னிரண்டடிகளில் முடிந்துவிட்டது. மற்று, பெண்வழிச் சேறலைப் பழித்தனன் எனக் கொண்டால்தான் ஒருவாறு பொருந்தலாம். ஆயினும், தயரதன் வாய்மைக்கேயன்றிக் கைகேசிக்கு ஏவல் செய்திலனாதலின் தந்தையை இங்கிவன் எடுத்துக் காட்டியதாகாது. பொன்மானைப் பிடிக்கச் சென்றபோது தானே நன்னுதலாள் பெட்டாங்கு ஒழுகினான்; அதனால் அல்லலும் பழியும் ஆயின. மற்று,பெண்ணேவல் செய்வது பிழையெனின் மீண்டும் அது பெண்மையின் பழியன்று; இது வேறெவர் திறத்திற்கும் ஒக்கும். அதனைப் பகுத்தறிவின்றிப் புரிவார் மதியின் குறைவேயாம். தாரை தடுத்தபோது வாலி, அந் நன்னுதலாள் பெட்டாங் கொழுகிப் பெண்ணேவல் செய்திருந்தானால், இப்பொழுது இராமன் சுக்கிரீவனுக்குஇந்த இதோபதேசம் செய்திருத்தல் இயலாது. எது எவ்வாறாயினும், மங்கையரால் வரும் காமம் இல்லையேல் நரகமும் கேடும் இல்லை, என்ற தன் குருவிற்கு விஞ்சிய சீடனாகப்புகுந்த இராமன், "மங்கையர் இல்லையேல் அல்லலும் பழியும் இல்லை" என அறிவுறுத்த அமைந்த இது ஆச்சரியமாயிருக்கின்றது. இதுவே இவன் கருத்தாயின், தன் மனைவியை வாலி வௌவினானென்று முறையிட்ட சுக்கிரீவனைநோக்கி "சுக்கிரீவ, மங்கையர் திறத்தினானே அல்லலும்பழியுமாம். ஆதலின் ருமை உன் கைவிட்டுப் போனது நன்றேயாயிற்று. இனி உனக் கல்லலும்பழியும் இல்லை, அவளை வேண்டற்க,அனைத்தும்,அவ்வாலிக்குஆகட்டும்" என இயம்ப, அப்படியே சுக்கிரீவனும் இந்த நல்லறிவை அங்ஙனே உட்கொண்டவனாகி, "எம்பெரும, உன் கையை விட்டுச் சீதையைக் கழற்றிக்கொண்டு போன இராவணனுக்கு அங்குவருகின்ற தொல்லையெல்லாம் வரட்டும்; நாமிருவரும் இனி ஏழேழ் பிறவிக்கும் அல்லலும் பழியும் அணுகாவகை இவ்வயின் இனிதிருப்போம்" எனப் பகர்ந்து, இந்த அறிவினாலே இவர் நட்புப் பிணைக்கப்பட்டிருக்க வேண்டும். குருவிற்கு விஞ்சிய கொள்கையே இத்துணை விபரிதம் புணர்த்திவிட்டதுபோலும் இந்தச் செய்யுளால் சேரும் பயன் அவ்வளவே. ஆயினும், இராமன் கருத்தேனும், அவனை அன்னவாறு இயம்பவைத்த கம்பர்தம் கருத்தேனும், அன்னதென்று மறந்தும் நினைத்தலாகாது. இந்தச் சுக்கிரீவனுக்கு எதனைச் சொன்னால்தான் என்ன என்னுமொரு பான்மை வாய்வந்தன கூறுகின்றான். மேலும், இராகவன் இவைகளைச் சொன்னானல்லன். சுக்கிரீவனது அறிவுப்பொலிவிலாவொரு முகத்தின் தோற்றமே இராமனை இன்னவாறு இயைபிலா மொழிகளை இயம்பவைத்த தென்னலாம். சொல்வோரினும் பெரிது சொல்லப்படுவோர் திறத்தினைச் சார்ந்தே உயரிய மொழிகள் உரைக்கலாவது உணரப்பெறுவதற் குரியதோர் உண்மை.

---

# இரத்நாவளி

[741-வது பக்கத் தொடர்ச்சி]

அங்கம் 3. களம் 6.

இடம்:—ஒரு சோலை.

வத்ஸராஜன் வருகின்றான்.

வத்ஸ:—என் காதலியை எய்தும் வேளை குறுகக் குறுக எற்றுக்கு என் இதயம் இப்படித் துடிக்கின்றது. மழை பொழிவதன் முன்னே பகலோன் கொடுமை மிகுவதேபோல், கைகூட நிற்கும்போதுதான் காமம் மேன்மேல் பற்றி யெரியுமோ!

[வஸந்தகனும் வாஸவதத்தையும் காஞ்சனமாலையும்வருகின்றனர்]

வஸந்:—(வாஸவதத்தைக்கு) மாதராய் ஸாகரிகா, நின் வரவுநோக்கிப் பேதுறும் அரசனது மொழிகள் என் செவிகளை யெட்டுகின்றன. இனி, நின்வருகையை விளம்பலாமோ?(வாஸவதத்தை தலையசைக்கின்றாள்) அரசே, நின்பாக்கியம் பெரியது.ஸாகரிகை வந்திருக்கின்றாள்.

வத்ஸ:—(அவளருகு நண்ணி) எனதருமை ஸாகரிகா, மதியமேயென்ன ஒளிர்கின்றது உன் முகம்; உன்நயனங்கள் இரண்டும்நளினங்கள்;பதுமம்போன்றனநின் கரங்கள்.இன்பமே அமர்ந்தவொருகோயில் நின் உருவம். வாவா, வந்தென் கரங்களிற் புகுந்து உருவிலான் ஒருவன் செய்யும் வெய்யநோய் தணித்தருள்வாய்.

வாஸவ:—(காஞ்சனமாலைக்கு ஒருபுறமாய்) நல்லாய், எனது தலைவன் இப்பொழுதுதான் தன் உண்மைஆர்வமுடன் பேசுகின்றான்—இனி,மிகவிரைவில் அந்தக் குரல் மாறிவிடுமே. அறியமாட்டா அதிசயமல்லவா இது?

காஞ்ச:—அதிசயமே இது! ஆயினும், எம்பெருமாட்டி, மிகமிகக் கோடியோர் இவ் வாடவர். அவர்தாம் அஞ்சிநிற்கும் பாதகமும் ஒன்று உளதென்று எண்ணவோ சற்றேனும் இடமில்லை.

வஸந்:—ஸாகரிகா, நாணத்தால் நாவறண்டு நிற்காதே. அரசனோடு உரைசெய்தருள். இன்று, வாஸவதத்தை இரைந்திரைந்து உரைத்த வன்சொற்கள் எம் செவிகளில் உறுத்திக்கொண்டிருக்கின்றன. அச்செவிகளை இப்பொழுது நின பண்ணமைந்த இனிய குரலினால் களிக்கச்செய்வது நின்கடன்.

வாஸவ:—(காஞ்சனமாலைக்கு ஒரு புறமாய்) வன்சொல் வழங்குகின்றவளா நான், பெண்ணே, காஞ்சனமாலை,நீயே சொல். என்னை இன்று நன்கு பாராட்டுகின்றான் இவ்வஸந்தகன்.

காஞ்ச:—சற்றுப் பொறுத்தன்றோ தெரியும் அவனுக்கு இதன் பலன்.

வஸந்:—அரசேகாண்,சந்திரன் எழுந்துவிட்டது. புலவியால் விளர்த்த வொரு கன்னமேபோல்எல்லாம் விளர்த்துத் தோன்றும்படி வெண்ணிலாப் பொழிகின்றது.

வத்ஸ:—ஆருயிர்க் காதலி, இக் கங்குலின் தலைவனும் அத்திங்கள், பருவதத்தின் சிகரத்தில் நின்று, நின்கன்னத்தின் ஒளிகண்டு வெள்கினன்போல் தன் கிரணங்களை யெல்லாம் உதிர்த்துவிடுகின்றான் பார். அவன் உதிப்பதனைத்தும் வீண். உன்றன் வதனத்தின் வனப்பிற் குடைந்து பதுமங்கள் குவிந்துவிட்டனவே! நின்கண்கள் அதனினும் அரியதோர் இன்பத்தைப் பரப்புகின்றன. உன் பார்வை ஒன்று, புரியமாட்டாவதிவியாதோ அச்சந்திரன் இம்மகரக்கொடியோனுக்குப் புரியவல்லன்? நின்வனப்பு வெளிப்பட்டிருக்கும் வேளையில் இத்திங்கள் ஒளிந்துகொள்வதே உத்தமம்? தன்னிடம் அமுதம் உளதென்னும் பெருமிதத்தினால் உயர்வானாயின், நின் அதரங்களினும் அமிர்தம் உளதென்பதை மறந்ததோ அந்தமதி!

வாஸவ:—(போர்த்திருந்த மேலாடையை எறிந்துவிட்டு) நல்லவென் தலைவா, ஸாகரிகை யென்றே இன்னமும் என்னை எண்ணியிரு. உன் இதயத்தைக் கவர்ந்துகொண்டிருக்கின்றாள் அவள். கண்டனவெலாம் உனக்கு ஸாகரிகையாகவே தென்படுகின்றன.

வத்ஸ:—(ஒரு புறமாய்) என்னவிது! அரசி வாஸவதத்தையா! என்னவிது! என்னவிது!

வஸந்:—என் உயிரிற்கே இப்பொழுது ஆபத்து வந்துவிட்டது, அதுதான் அது.

வத்ஸ:—(அரசிக்கு) அன்பே, என்னை மன்னித்தருள்.

வாஸவ:—அரசே, என்னை அவ்வண்ணம் அழைக்காதே. அவ் வடைமொழியோ வேறொருத்தியின் உடைமை.



வஸந்:—(ஒரு புறமாய்) என்ன செய்வேன் நான் இப்பொழுது. (வாஸவதத்தையை நோக்கி) உயர்குலப் பெருமாட்டி நீ யாதாலால் அரசன் புரிந்த இம்முதற்பிழையைப் பொறுத்துக் கொள்வதுஉனக்கரியதன்று.

வாஸவ:—தக்கோய் ஏ வஸந்தகா, நீங்கள் சூழ்ந்திருந்தகாரியத்தினிடையே அழையாமற்புகுந்த நானே பிழைசெய்திருப்பவள்.

வத்ஸ:—இனி மறுத்துப் பயனில்லை. எனினும் சொல்வதைக்கேள்.நின் மதியனையமுகத்தினழகினைக் கெடுக்கும் சினமுடைச்சிவப்பை, உன் பஞ்சிமென் தளிரடிகளுக்கு இறக்கிக்கொள்ளும்படி வேண்டினனாய் உன்னிருபாதங்களிலும் பணிகின்றேன்.(அவள் பாதங்களில் விழுகின்றான்.)

வாஸவ:—எழுந்திரு, தலைவா, எழுந்திரு. தன் நாதனது அன்புதா னிவ்வளவு வெளிப்படையாகத் தென்பட்டபிறகு கோபங்கொள்ளத்துணிபவள் நன்மனைவியாகமாட்டாள். உன் உவகைக்கு இடையூறு வேண்டா,நான்செல்கின்றேன். (போகமுயல்கிறாள்.)

வஸந்:—வேண்டா, பெருமாட்டி, அரசன்பால் பரிவுகூர்ந்து இரக்கங்கொள். இந்நிலையில் அரசனை விட்டுச் செல்வாயாயின் பிறகு மிகவும் மனம்வருந்த நேரிடும்.

வாஸவ:—சீ போ! முழுமூடனே, முன்னே இரங்கவுங் காரணமில்லை, பின்னே வருந்தவும் காரணமில்லை.

[காஞ்சனமாலையுடன் போகிறாள்]

வஸந்:—அரசே, இனி நீ எழுந்திருக்கலாம். நின் நாயகி போயகன்றனள். காட்டிலே உட்கார்ந்து கண்ணீர் பாய்ச்சுவதால் பயனென்ன!

வத்ஸ:—சற்றேனும் இரங்காமலா சென்றுவிட்டாள்?

வத்ஸ:—இல்லை யில்லை. நம்முடைய தோல் இன்னும் நமதுஉடலைப் போர்த்திருக்கின்றதே.இதுதான் அவள் வைத்த இரக்கத்தின் பயன்.

வத்ஸ:—சீ போ! பேதாய். பரிகசமாயிற்றாஉனக்கு இது! இந்த இடுக்கண் உன்னுடைய அசட்டுத்தனத்தாலே நேர்ந்தது. இனிமேல், நான் அவள்பால் காட்டும் அன்பினை உண்மையென்று நம்பமாட்டாள். அவள் அன்பிற்கு நான் இழைத்த இப்பிழை கண்டு பொறுக்கமாட்டாதவளாய்த் தன் உயிரையே வெறுத்துவிட நேரினும் நேரலாமே. என்செய்வேன் நான். இவ்வளவிற்கும் நீயே காரணம். வைத்தகாதலில் வஞ்சனைபோவது மிகக்கொடிது காண்.

வஸந்:—உன் நாயகி கோபம் மிகக் கொண்டிருக்கிறாள்; இதுவரையில் பிரத்யக்ஷப்பிரமாணம். இதன் மேல் அவள் என்னசெய்வாள் என்பதை யாராலும் நிச்சயமாக அனுமானிக்க இயலாது. இதற்கிடையில், ஸாகரிகை உயிருடன் இருக்கின்றாளோ, இல்லையோ?

வத்ஸ:—அவளைப் பற்றித்தான் நானும் நினைத்துக் கொண்டிருந்தேன்.

(இருவரும் சிறிது அகன்று நிற்கின்றனர்.)

[வாஸவதத்தைபோல ஆடை அணிகள்பூண்டு ஸாகரிகை வருகிறாள்.]

ஸாகரிகை:—நல்லவேளை, ஸங்கீத சாலையில் ஒருவர்கண்ணிலும்தென்படாமல் தப்பிவந்துவிட்டேன்.

இவ்வேடம் என்னை இதுவரையிற் காத்தது. மற்று இனி யான் என்ன செய்வேன்.

வஸந்:—(அரசனுக்கு) இப்படிச் சிந்தனையில் ஆழ்ந்து கிடப்பானேன். நாம் ஏதேனும் உபாயம் சூழ வேண்டும்.

வத்ஸ:—என்ன உபாயம்?

ஸாகரி:—(ஒருபுறமாய்) என் துயரிற்கும் உயிரிற்கும் நான் ஒருங்கே ஒரு முடிவு தேடிக்கொள்வதே நலம். யான் யாது எண்ணினேன் என்பதே அரசி வாஸவதத்தைக்கு ஒருநாளுந் தெரியாமலிருக்கவேண்டும். அப்பொழுதுதான், என் மானமும் ஸுஸங்கதையின் மானமும் காக்கப்படும். என் காரியத்திற்கு இந்த மரமே போதும்.

வத்ஸ:—பின்னும் பின்னும் அரசியின் கால்களில் விழுந்து வேண்டுவதன்றி வேறெவ்வுபாயமுமெனக்கு [illegible]யில்லை. அரண்மனைக்குச் செல்வோம், வா.

[illegible]:—இருஇரு, காலடிச்சத்தம் கேட்கின்றது. [illegible]ல் மனமிளகி அவளே திரும்பி வருகின்றாள் போலும்.

வத்ஸ:—[illegible] குணமுடையவள் அவள்; அப்படியும் இருக்கலாம். விரைந்து சென்று, வருகின்றனளோ, பார்.

ஸாகரி:—மாதவிக் கொடியால் எனது கழுத்தினில் சுருக்கிட்டு இந்தக்கிளையில் தொங்கிச் சாவேன். ஐயகோ, எந்தாய், ஆருயிர் அன்னாய், நெடுந்தூரத்திற்கப்பால், ஏனென்று கேட்பாரின்றித் தனியே நான் என் துயருடை யுயிரைத் துடைத்துக்கொள்கின்றேன். (மாதவிக் கொடியைக் கழுத்தில் சுற்றிக்கொள்கின்றாள்)

வஸந்:—யாரங்கே?—ஹா! எங்கள் அரசியா! ஹே! ஹோ! அரசே, வா வா, விரைந்து வா, இல்லையேல் வாஸவதத்தை மாய்கின்றாள்.

வத்ஸ:—(விரைந்து வந்து) எங்கு எங்கு எங்கு உளள்?

வஸந்:—பார்!

வத்ஸ:—(விரைந்தோடி, மாதவிக் கொடியை அறுத்தெறிந்து) பொறுமையற்ற மாதே; என்ன கொடுமை இது! என்னுடைய உயிர் இப்பொழுது எனது தொண்டையிலே துடிக்கின்றது. உன் உயிர் உனது உடைமையல்லவே; அதனை உன் சித்தம்போல் உடைத்துவிட உனக்கு என்ன உரிமையிருக்கின்றது. இனி, இத்தகைய காரியம் செய்யத் துணியாதே.

ஸாகரி:—(ஒரு புறமாய்) ஹா! என் வேந்தன்! இவனது தோற்றம் எனக்கென் உயிரின்மீது ஆசையைத் தூண்டுகின்றது. என் இறுதிக் கோரிக்கையேனும் நிறைவேறியதே. இவனைப் பார்க்கப்பெற்றேன். இனிமேல் நான் சஞ்சலமின்றிச் சாகலாம். (அவனை நோக்கி) ஐயனே, எனக்குத் தடைசெய்யாதே; வெறுப்புடைய என் வாழ்க்கைக் கிறுதிதேடிக்கொள்ள வேறோர் செவ்வி வாய்ப்பது அரிது. நின் அரசியின் மனத்தைப் புண்படுத்தல் உனக்கு அழகன்று.

வத்ஸ:—என்னருமை ஸாகரிகையும் இப்படி இயம்பு வாளோ! கையறவு இனி நீ கொள்ளவேண்டா. கொலையுடை இக்கொடிகளை நீக்கிவிடு. என்னுடைய உயிரோ நீங்கப் பார்க்கின்றது. அதனைத் தடுக்கும் வண்ணம் நின் அருமைக் கரங்களால் என் கழுத்தினைக் கட்டிக்கொள் (அவளைத் தழுவி அணைத்துக் கொள்கிறான்). நண்பா, மேகமின்றி மழை பெய்கின்றது.

வஸந்:—ஆம் ஆம்! அரசி வாஸவதத்தை, சுழுவளி போல் இப்பொழுது புகுந்தடிப்பாளாயின், மின்னலின்றி இடித்தும்விடும்.

[வாஸவதத்தையும் காஞ்சனமாலையும் வருகின்றனர்.]

வாஸவ:—என் தலைவன் எனது அடிகளில் விழுந்து வேண்டியும் நான் இணங்காமல் ஏகிவிட்டது அழகன்று; ஆதலின், காஞ்சனமாலா, சென்று நான் என் மன்னவன் மனத்தினை மெல்லியமொழிகளால் ஆற்றவேண்டுவதே முறை...எங்குளன்?

காஞ்ச:— எம்பெருமட்டி, நீயன்றி யாரே இங்ஙனம் எண்ணுவார். அரசன் பிழையிழைத்தானேனும், அதனைப்பொறுக்காத பிழை நீயோ இழைத்தலாகாதென நினைக்கும் இது நேரிதே.

வாஸவ:—பெண்ணே, சொல், என்மேல் முன்வைத்திருந்த ஆசையை மீண்டும் எய்தானோ, அவன்?

காஞ்ச:—அரசனது குரல் கேட்கின்றது. உன்னுடைய கோபத்தைத் தணிக்குமாறு தேடிவருகின்றான் என்று நினைக்கின்றேன்.

வாஸவ:—மெல்ல நாம் அவனுக்குப் பின்னாகச் சென்று என் நாயகன் கழுத்தைக் கட்டிக்கொண்டு முழுதும் நான் மன்னித்துவிட்டேன் என்று மொழிவேன்.

வஸந்:—ஸாகரிகா, போதும் நின்நாணம். வேந்தனுக்கு உன் உள்ளத்தை உரை.

வாஸவ:—(ஒருபுறமாய்) இங்குமா ஸாகரிகை!—என்னவிது!

ஸாகரி.—ஐயனே, என்மேல் அன்பு உள்ளவன் போல் வீணே இப்படிப் பாவனை செய்வானேன். உன் உயிரினும் இனியவள் உனக்கு உன் தேவியே ஆகின்றாள் என்பது அறிவேன். இதனால், நீ அவளது சினத்தைத் தேடிக்கொள்வதால் பயனென்ன?

வத்ஸ:—நீ சொல்வதத்தனையும் உண்மையன்று. அவள் மார்பு நெட்டுயிர்ப்புவீங்கும்போது நானும்பரிவுகாட்டி எதிர்மூச்சுவிடுவேன், உண்மையே; அவள் சிடுசிடுத்திருக்கும்போது நான் சாந்தப்படுத்துவேன், உண்மையே; கோபத்தால் புருவம் வளைந்து முகம் கோணியிருக்கும் போது அவள் கால்களில் நெடிது விழுவேன், உண்மையே. அரசி என்னும் உயரிய பதவிக்கேற்ற ஆராதனைகளே இவை; மற்று, காதலின் வேகத்தால் விளைகின்ற காணிக்கைகள் அனைத்தும் நினக்கே உரியவை.

வாஸவ:—(அரசனருகு வந்து) வேந்தே, நீ சொல்வதத்தனையும், உண்மையே. நம்புகின்றேன் நான்.

வத்ஸ:—என்னவிது! நீயா இங்கு வந்தனை. ஆயின், நீ கோபமொன்றுங் கொள்ளவேண்டா. உன்னைப் போன்று இவள் உடை தரித்திருப்பதால் நீயே என்றெண்ணியே நான் இங்கு வர நேர்ந்தேன் என்பது தெரியவில்லையா? என்னைப் பொறுத்தருள் (அவள் கால்களில் விழுகின்றான்.)

வாஸவ:—எழுந்திரு, எழுந்திரு! உயரிய என் பதவி உன்னை இப்படிக் கீழே வீழ்த்தவேண்டா.

வத்ஸ:—(ஒருபுறமாய்) நான் ஸாகரிகைக்குச் சொன்னவை இவள் காதில் பட்டுவிட்டனவே—எனின், இதன்மேல் இவள் வெஞ்சினத்தை எப்படித்தான் தணிப்பது!



வஸந்:—பெருமாட்டி, அரசன் சொல்வதவ்வளவும், உண்மையே. நீதான் உன்உயிரிற்கு இறுதி தேடிக்கொள்கின்றாய் என்ன அஞ்சி, உன்னைக் காக்க வேண்டும் என்னும் எண்ணத்துடன் நானே அரசனையிங்குக்கொணர்ந்தேன். இன்னும் சந்தேகம் இருக்குமானால், இந்தச்சுருக்கைப் பார். (மாதவிக்கொடிச் சுருக்கை யெடுத்துக் காட்டுகின்றான்.)

வாஸவ:—பெண்ணே, காஞ்சனமாலா, இக்கொடியினால் இப்பார்ப்பானைக் கட்டி யிழுத்துக்கொண்டு அச்சிறுமியை முன்னே நடத்திச் செல்.

காஞ்ச:—உத்தரவுப்படியே (வஸந்தகனைக் கொடியால் கட்டி அடிக்கிறாள்.) பார் ஐயா, உன் சாமர்த்தியத்தின் பயனைப் பார். அரசி வாஸவதத்தையின் வன்குரல் உன் காதுகளில் உறுத்திக்கொண்டிருந்தனவோ! இப்பொழுது என்ன சொல்கிறாய். ஸாகரிகா முன்னே நட.

ஸாகரி:—இறக்க எண்ணியபோது, ஏனோ நான் அழியவில்லை.

வஸந்:—சிறைப்பட்ட என்னை நீ சிந்திக்கமாட்டாயோ, அரசே.

(வத்ஸராஜன் தவிர ஏனையோர் போகின்றார்)

வத்ஸ:—என்ன துர்அதிர்ஷ்டம் இது. இனியாது செய்வேன்? அரசியின் முகத்தில் படிந்தகோபத்தை எப்படிக் கலைப்பேன். ஸாகரிகையை அவள் வஞ்சினத்தினின்று எப்படிக் காப்பேன்; வஸந்தகனைஎவ்வாறு விடுவிப்பேன்? என் மனம் குழம்புகின்றதே. இங்கே காத்திருப்பதில் பயனில்லை. வாஸவதத்தையைச் சாந்தப்படுத்த இன்னும் முயல்வதே நலம். (போகிறான்)

மூன்றும் அங்கம் முற்றிற்று.

---

# நம்மாழ்வார் வைபவம்

## திருவாய்மொழி

(746-வது பக்கத் தொடர்ச்சி)

7-ம் பத்து, 2-ம் தசகம்.

1-ம் பாசுரம்.

கங்குலும் பகலுங் கண்டுயி லறியாள்
கண்ணநீர்க் கைகளா லிறைக்குஞ்
சங்கு சக்கரங்க ளென்றுகை கூப்புந்
தாமரைக் கண்ணென் றேதளரும்
எங்ஙனே தரிக்கே னுன்னைவிட் டென்னு
மிருநிலங் கைதுழா விருக்குஞ்
செங்கயல் பாய்நீர்த் திருவரங்கத் தாயிவள்
திறத்தென் செய்கின் றாயே.

அவதாரிகை:— சென்ற ஆறும் திருவாய் மொழியில் இம்மஹான் திருவேங்கடமுடையானோடு தனக்குக் கலவிகிடைக்கவேண்டுமென்று அபேக்ஷித்தபடி கிடைக்காத வியஸநத்தாலும், தாமவன் நோக்கத்தை யநுசரித்து அவன் திருவடிகளில் பிராட்டி புருஷகாரமாகத் தம் ஆத்மரக்ஷணத்தை ஸமர்ப்பித்தும் அவன் பிருகிருதி ஸம்பந்தத்தை நிவர்த்தித்துக் காணாமையாலே அதுமாத்திரம்நோவுபட்டு இனிக் கோவிலில் (ஸ்ரீரங்கத்தில்) பெரிய பெருமாள் திருவடிகளடைந்து அங்கே கடாக்ஷம் பெறவேண்டுமென்று உத்யோகித்தாரென்று கொள்ளவேண்டும். அங்கும் அப்பெருமானும் மந்தஹாஸத்தோடு வரவேற்றதைத்தவிர தாம் அபேக்ஷித்த விசேஷ கலவையை யடையவில்லை. இதினாலே ஆழ்வார் மிகக் கலங்கி ஒரு காரியமுஞ் செய்ய ஈடில்லாதவராய் இருக்கு மிருப்பை அவருடைய பக்தர்களும் நேசரு மறிந்து அரங்காநதப்பெருமானை விட்டுப் பிரிந்தாளொரு பிராட்டி தன் விரஹதெசையில் படும் அவஸ்தையை அவளுடைய திருத்தாயார் பாசுரத்தால் பகவானுக்கு அந்யாபதேசத்தாலே விண்ணப்பஞ் செய்வதாக இத்தசகம் இவ்வாழ்வாரால் பாடப்பெற்றுள்ளது.

உரை:—முதலடி—இராத்திரியிலும் பகலிலும் தூங்குவதை இவள் அறியமாட்டாள். இரவில் நாயகனிடமின்பக் கலவையில் ஈடுபட்டு உறக்கம் ஒழிந்தாள். பகலில் அவனை நீங்கி யிருப்பதால் விரஹ வியஸனத்தால் தூங்குகிறாளில்லை. ஆகையால் உறங்குவது என்றதே இவளுக்கு இன்னவகையா யிருக்கு[illegible]ன்ன குணத்தைப் பயக்குமென்ற பொருளை அறி[illegible]ன்பது கண்களில் கண்ணீர் எப்பொழுதும் இவளுக்குச் செல்லும் மனோ வியாகுலத்தால் பெருகுவதால் அதைக் கைகளா லளாவித் துடைத்துக்கொள்கிறாள்.

சங்கு சக்கரங்களோ டெழுந்தருளவேண்டுமென்றுரைக்கத் துடங்கி முழுவதும் வாய்கொண்டுசொல்லமாட்டாமையால் கைகளிரண்டையும் "எழுந்தருள" என்றசொற்களுக்குபகரமாகக் கூப்பாநிற்கும். தாமரைகண்ணனே என்று "மேல் நோக்காய்" உச்சரிக்க நாவெழாமல் தளரும்—மூச்செறிந்து இரங்கும்—உன்னைவிட்டு எப்படிப் பிழைத்திருப்பேனென்று இருநிலம் துழாவி நிற்கும் - இரண்டு கரங்களாலும் பூமியைத் துழாவி அலமரும் - நிகில ஜெந்துக்களெல்லாம் வணங்கித் தொழும்படி திருவரங்கத்தில் பள்ளி கொண்டவனே! இவள் திறத்து அருள்புரிய வல்லவோ அவதரித்திருக்கின்றாய்! இவள் திறத்தில் என் செய்ய நினைத்தருளினாய்.

விசேஷக் குறிப்பு:—முடிவில் "இவள்" திறத்து என்றெடுத்தது இவளின் துர்த்தசைகளெல்லாவற்றையும் எடுத்துரைக்க முடியாமையால் இவளையே பெருமாள்முன்னர்க் கொணர்ந்து நீரே இவளின் ஸ்திதியைத் திருக்கணுற்று அறிந்து நோய்தீர்த்துக் கொடுமென்று வேண்டுகிறபடி.

---

2-ம் பாசுரம்

என்செய் கின்றாயென் றாமரைக்கண்ணா வென்னுங்
கண்ணீர் மல்க விருக்கும்
என்செய்கே னெறிநீர்த் திருவ ரங்கத்தா
யென்னும் வெவ்வுயிர்த் துயிர்த்துருகும்
முன்செய்த வினையே முகப்படா யென்னும்
முகில்வண்ணா தகுவதோ வென்னும்
முன்செய் திவ்வுலக மூண்டுமிழ்ந் தளந்தா
யென்கொலோ முடிகின்ற திவட்கே.

அவதாரிகை:—இப்பிராட்டியினுடைய விரஹாவஸ்தையைப் பகவானுக்குநேரேபிரத்தியக்ஷமாகும்படி காண்பிக்க உத்தேசித்தாலும் மேலும்[illegible] வற்புறுத்தப் பின்னுமெடுத்துக் [illegible]

199198

M211, N28KN
N34.7:48

1-ம் அடி:-தாமரைக்கண்களால் கடாக்ஷிக்கப் பெறவில்லையென்ற வருத்தத்தால் கண்ணீர்கூட வற்றிப்போய் இவள் அழக்கூட அசக்தளாயிருக்கிறாள்; ஆகையால் அது பெருகாதே கண்களில் நிறைந்து துளிக்கும். அரங்கத்தாய்-என் செய்கேன் என்னும். பின் உஷ்ணமாக மூச்சுவிட்டு உருகும்; முன்செய்தவினையே- ஐயோ நான் இப்படிப் படுவது முன்ஜன்மத்தில் செய்த வினையே என்று பரிதவிக்கும் - முகப்படாய்- என்முன் வந்துஎன்னுடையகண்களுக்குத் தோன்றாய், என்று முகில்வண்ணன் ஆன பகவானைப் பிரார்த்திக்கும்- ஸர்வ சக்தனை பகவான் காப்பாற்றவேண்டிய நாயகனானாலும் அவனுங்கூட, குளிர்ந்த கடாக்ஷத்தால் அளிப்பவனுங்கூட, கைவிடும்படி என் பூர்வஜன்ம தீவினைகளல்லவோ குறுக்கே நிற்கிறதென்று வியணித்துக் கூறுகிறபடி. "முகப்படுதல்"—"முகம் காட்டுதல்" என்ற சொற்றொடர்கள் திருவாங்கூரில் "காணுகை" என்ற அர்த்தத்தில் நாட்டுப் பிரயோகமாக (Provincialism) இப்பவும் நடைபெறுகின்றன. நீ லோகங்களை யெல்லாம் படைத்துக் காத்து எல்லாவற்றையும் கேவலம் கிருபையால் நிஷ்காரணமாய் ரக்ஷித்த பகவானல்லவோ? நீ இப்போழ்து தயவில்லாமல் என்னை விடுவது உன் தகுதிக்குப் பொருந்துமோ? பரமகாருணிகனே! இவளுக்கு என்ன கேடு விளையுமோ? இவள் முடிவு என்ன? என்று கேட்கிறபடி. உன் அனுக்கிரகம் பலிக்கப்போகிறதா? தீவினைகளின் பயனுப் இவளுக்குக் கெடுதல் சம்பவிக்கப்போகிறதா? என்று சங்கை.

---

3-ம் பாசுரம்

வட்கில ளிறையும் மணிவண்ணா வென்னும்
வானமே நோக்கும் மையாக்கும்
உட்குடைய சுரருயி ரெல்லா முண்ட
வொருவனே யென்னு முள்ளுருகும்
கட்கிலீ யுன்னைக் காணுமா றருளாய்
காகுத்தா கண்ணனே யென்னுந்
திட்கொடி மதில்சூழ் திருவரங் கத்தா
யிவள்திறத் தென்செய் திட்டாயே.

பதக்குறிப்புக்கள்:—வட்கு - வட்குதல் - வெட்கப்படுதல், இறையும்-சிறிதேனும், இலள்-இல்லாதவள். கட்கிலீ-கட்கள் - கண்கள் - கண்களுக்கு இலி - காணக்கூடாதவன் - கண்களுக்குக் கோசர மில்லாதவனே, மணிவண்ணவோ என்னும் - மணியைப்போல் காந்தியுள்ளவனே என்று கூப்பிட்டழைக்கும்; வானமே நோக்கும் - பகவான் வருகிறானோ வென்று ஆகாயத்தையே பார்க்கும்; மையாக்கும் - அப்படி வரக்காணமையாலே மோஹித்துவிடுவாள்; உட்கு உடை அசுரர் - அஞ்சும்படி தேவதைகளையும் எதிர்த்துப் போர்புரியவல்ல சக்தியுள்ள அசுரர். உயிரெல்லாம் உண்ட-கொன்று ஜயித்தவனை,ஒருவனே-ஆச்சரிய சக்தியுள்ளவனே, உள்ளுருகும் - பின்னையும் நீவரக் காணமையாலே மனத்தில் தபிக்கும். கட்கிலி—மனிதர் கண்களுக் ககப்படாதவனே, இனி என்னைக்காணுமாறருளாய் - எனக் கொருத்திக்காக மாத்திரம் அஸாதாரணமாய்க் கண்களுக்குத் தெரியும்படி எழுந்தருளக்கூடாதோ என்று வினவுகிறபடி; இப்படி கியதியல்லவென்று பகவான் சொன்னதாகக் கொண்டு; காகுத்தா - ஸ்ரீராமனை யவதரித்து காடும் காடுகளும் [illegible] கண்ணனே யென்னும் - இடைச்சேரியில் எல்லாருக்கும் பிரியதரிசன மளித்துக்கொண்டு உலாவவில்லையா என்று சொல்லும்; திருவரங்கத்தாய் இவள்திறத்து என் செய்திட்டாயே-உன்னிஷ்டம் அநுக்கிரகிக்கவோ அல்லவோவென்று கேட்கிறபடி - எதிர்காலப் பொருளில் இறந்தகாலப் பிரயோகம்.

---

4-ம் பாசுரம்

இட்டகா லிட்ட கைகளா யிருக்கு
மெழுந்துலாய் மயங்குங் கைகூப்பும்
கட்டமே காத லென்று மூர்ச்சிக்குங்
கடல்வண்ணா கடியைகா ணென்னும்
வட்டவாய் நேமி வலங்கையா வென்னும்
வந்திடா யென்றென்றே மயங்குஞ்
சிட்டனே செழுநீர்த் திருவரங் கத்தா
யிவள்திறத் தென்சிந்தித் தாயே.

உரை:—இட்டகால் இட்டகையாய் ஒரு சேஷ்டிதத்திற்கும் சக்தியற்றவளாய்ப் பூமியில் கிடக்கும். கொஞ்சநேரம் கடந்தபின் தனக்குத்தானே எழுந்து உலாவுவதுபோல் சற்றுத் திரிந்து பிறகு மயங்கும் - கைகூப்பும் - அழைப்பதற்குத் தனது கைகளைக் கூப்பும். கட்டமே காதல் ஐயோ? கஷ்டமே. பகவானிடத்தில் வீண் ஆசைப் பட்டுவிட்டேனே. இது நிறைவேறக்கூடியதல்லவே? என் செய்வேன்? காதலால் நலிவுபடுகிறேனேயன்றி (கஷ்டம்தவிர) சுகம் லவலேசமுமில்லையே யென்று வருத்தப்படுகிறாள். மூர்ச்சிக்கும் - பெருமூச்சுவிடும். கடல்வண்ணன்-வெகுநீளமான கடலைப்போல் நீலமேகசாமளன்,கடியை-கொடியவனே - கொடூர சித்தமுள்ளவனே, காண்-கண்கள் திறந்து கடாக்ஷி; வலங்கையில் கூரானசக்கராயுதத்தைத் தரித்துக்கொண்டிருப்பவனே - வந்திடாய்—வரவேண்டுமென்று அழைக்கும் - மயங்கி- மயங்கிச் சொல்லாநிற்கும்; இதற்குமேலும் வரக்காணமையினால், சிட்டனே-சிஷ்டன்என்ற ஆரியபதத்தின் திரிபு- விதிப்படி கர்மாநுஷ்டானம்செய்து, துப்புர ஒழுகி நாலுபேர்களும் மதிக்க யோக்கியனென்றும் சீலனென்றும் பேர் கேட்பவனே, திருவரங்கத்தாய் - புண்ணிய தீர்த்தமாகிற காவேரிக்கரையில் கோயில்கொண்டு எழுந்தருளியிருப்பவனே! இங்கு இப்பிராட்டிக்குள்ள அத்தியந்த சிநேகத்தாலும் பகவானிடமுள்ளசலுகையிலும் கோபாபவேசம்கொண்டு தூஷிக்கிறபடி. சீதாபிராட்டியும், ஸ்ரீராமபிரான் அவளைக் காட்டுக்கு அழைத்துச்செல்ல ஏவாதென்று செப்பியபோது, தன் தகப்பனாரகிய ஜநகமகாராஜன் தன்னை ஒரு புருஷவிக்ரஹத்துக்கா வாழ்க்கைப்படுத்தினரென்று தாழ்வாகப் பேசியது நமது ஞாபகத்துக்குவரத்தக்கது. இதில் அந்தர்கதமானசிற்றத்தையும் நிந்தையையும் ஒருபோழ்தாகினும் வலிகடந்த மாற்றமுரைக்காத இருபத்துநாலாயிரப்படி உரைகாரர் இவ்விடத்திலமைத்தெழுதியிருப்பது வரையப்பாலது. "உம்முடைய சிஷ்டத்வம் அழகியதாயிருந்தது. தங்களைத் தாங்களே காப்பாற்றிக்கொள்ளக்கூடாத ஸ்திரீகள் குடிகெடுகைக்கு அழகியதாகிய பொய்களுக்கு ஆதாமாயிருக்கிறவரே! கெட்ட தொழில்களையே செய்து பூணூலை வெளுக்கத் தரித்துக்கொண்டு கையிலே பவித்திரத்தையுமிட்டு வேதபஞ்சாதி சொல்லிக்கொண்டு திரிவாரைப்போல இருந்தது உம்முடைய நீதி என்று"—மேலும், 'இச்சிஷ்டவேஷம் பூண்டுகொள்வது



புண்ணிய தீர்த்தக்கரையிலா திருக்கோவிலிலெழுந்தருளிச்செய்யவேண்டும்!" சுருக்கமாய் யாம் சொல்லத் துணிந்தால், காவேரி புண்ணிய நதிக்கரையில் ருத்திராக்ஷப்பூணைவேஷம்போட்டு ஸாதுஸ்திரீகளைப்பொய்களை யாண்டு வஞ்சிக்கவேண்டுமோ! அந்தோ! என்று. பகவானை நிந்திக்கிறபடி.

---

# தருமன் மாண்பு

[750-வது பக்கத் தொடர்ச்சி]

இன்னணம், அறத்திற்கோர் அச்சாணியாய் நின்ற இத்தருமனது மாண்பினைச் சூதுபோர்ச் சருக்கத்தில்தான் வெகு நன்றாகக் கற்கலாம். இராசசூய யாக மியற்றியபின், உலகில் பேரும் புகழும் இன்பங்களும் அனுப்பவித்தானாதலின், அப்பேரும் புகழும் இன்பமும் நேர்ந்தவாறே, தோல்வியுடன் அவமானமும்நேர்வது இயல்பென்று, அவற்றின்வரவை எதிர்பார்த்தவண்ணமாகவிருந்தது தருமன் மனம். ஆதலின் விதுரன்வந்து திருதராட்டிரனது திருமுகத்தை நீட்டியபோது,தருமனுக்குவியப்புமிகவில்லை. உடனே அவனது அகக்கண்முன், விதிவழியே நிகழும் சம்பவங்கள் பலவும் தெள்ளிதின் தோன்ற, அவற்றினை நீக்குதல் அரிதென உணர்ந்து, தான் செய்யக்கூடியதெல்லாம்தனது அறமாகிய விரதத்தினைக் காப்பாற்றுதலேஎனத் துணிந்தான். இவன் இவ்வாறுநினைக்கவும்,இளையவன்மாற்றமொன்றிப் புறப்படுவதே கடனென்று கூறவும், முன்னவன்,

சேத்த நாகவெங் கொடியவன்
கொடியவன் சிந்தையின் நிலைதோன்றக்
கோத்த கோவைநன் றாயினும்
தகுவதோ குருகுலந் தனக்கென்றான்

வடமொழிப் பாரதம் பயின்றுளோர், தருமனுக்குச் சூதில் மிகவும்பற்றென்றும்,அது அவனதுசெவ்விய குணக்குவியலில் தோன்றும் ஒரு வடுவென்றும் கூறுவர். பரிதியிலும் வடுக்களுண்டெனின், தருமனிடத்தும் அத்தகைய வடுஅமையாமல் போகாது. எனினும் வில்லிபாரதத்தைப் பொறுத்தமட்டில் தருமன் அச் சூதினை அஞ்சுமாறு மிக அழகாகக் கூறப்பட்டுள்ளது †.

படியு மாமறை யொழுக்கமும்
புகழுமுன் பயின்றகல் வியும்சேர
மடியு மாமதி யுணர்ந்தவர்
வைப்பரோ சூதின்மேல் மனம்வையார்
அழகு பேறி வாகவே
கொண்டவர் அறத்தொழில் புரியாமல்
கழக மாடவும் பெறுவரோ
இதனினும் கள்ளுணல் இனிதன்றே.

தருமன் சூதினை யெவ்வளவு வெறுத்தான் என்பது இதனிலிருந்து நன்கு விளங்கும். ஆதலின் அச்சூதினைக் கூடியவரையில் அணுகாதிருப்பதே மனிதருக் கேலும். ஆயினும், அச்சூதில் பிடிபடும்படி விதியால் உந்தப்பட்டால், அச்சூதினை அளவுடன் ஆடவேண்டுமென்று விதி வகுத்துக் கூறுவது, கள்ளுண்டானேனும் தன்னிலை யறியாதிருத்தல் தகாதெனக் கூறுவதை ஒக்கும். ஆதலின் தருமன் பின்னால் தன் மனையாளை யாடித்தோற்றது அவனுக்குஇழுக்கன்று என்க; ஏனெனின், சூதாட்டத்தினால் மதிகலங்கிய நிலையில் ஒருவன் செய்யும் அக்கிரமங்களை அவன் மேல் சார்த்துவது தவறேயாகும். மிக்க நெறியுள்ளவரும் தந்நிலையில்லாமல் இருக்கும்போது கொலையும் இயற்றல் கூடுமென்பது(Scientific) சாத்திர உண்மை. ஆதலின் தருமன் செய்யக்கூடியதெல்லாம் அச்சூதிற்குப் போகாதிருப்பதே.ஆனால்மூத்ததாதையின் ஓலை விதிப்பயனென்ன வந்துளதே! ஆதலின் தருமன்

என்க ருத்தினாற் பெறுவதென்
விதியினை யாவரே வெல்கிற்பார்

என்று உளம்நொந்தான். அதுவும் சகுனி அவ்வாறு சூதாட முன்வந்ததுதான் அவனுக்குமிக்க ஆறுமையளித்தது.

தோத கத்துடன் என்னையோ
சகுனிதன் சூதினுக் கெதிரென்றான்.

ஆதலின் வடமொழியாளர் சிலர் சொல்வதுபோல், சகுனியைச் சூதில் வெல்வதற் கவன் அத்தினாபுரம் ஏகவில்லை. சூதுக்குக் கூப்பிட்டபோது, அவன்முகம் பலியிடப்படும் ஆட்டின் தோற்றத்தை நிகர்த்திருந்ததைச் சகுனியே அவனது முகக்கண்ணாடியில் பார்த்துக் கூறுகின்றான்.

யானெ றிந்த கவறு வெல்லின்
இசைவெ னக்க ளித்திநீ
தானெ றிந்த கவறு வெல்லின்
அதினி ரட்டி தருகுவன்
தேனெ றிந்து தேனு கர்ந்து
தேன்தொ டுக்கும் மாலையோய்!
யானெ றிந்த கோலைஞர் போல
அஞ்சல் வருதி ஆடவே.

என்றபோது தருமனது முகசொரூபம் எப்படியிருந்திருக்குமென்பதைப் பின்னும் விவரிக்கவேண்டியதில்லை. நிற்க, தருமன் மேற்கண்டவாறு கூறவும், இளையோரும் விழித்துக்கொண்டு, 'அது சூது, அங்குப்போதல் தகா'தென விளம்பினர். ஆனால், இளையதுணைவர் கூறுவதே வார்த்தையாயினும், திருதராட்டிரன் திருமுகமதுவாதலின் ஏகுவதே தகுதியெனக் கிளம்பி அத்தினாபுரம்சேர்ந்தான். பிறகுசூதாடினான். அப்போது விதுரன் கூறியது உண்மையென்று கண்

† பதினோராம் நாளிரவில் சுயோதனன் தருமனைப் பிடித்துத் தரும்படி துரோணனைக் கேட்க, மற்றவன், 'அவனைக் கொல்லாமல் பிடித்துத்தரவேண்டியதன் அவசியமென்ன'வென்று அவனைக் கேட்க, 'அவனைக் கொன்றால் யாவரும் கண்ணனது சக்கரத்திற்கு இரையாகிவிடுவர்; ஆதலின் அவனைப் பிடித்துத் தந்தால் மறுபடியும் அவனுடன் சூதாடி வென்று காட்டுக்குத் துரத்துகிறேன்' என்றுசுயோதனன் கூறியதாக வடமொழிப்பாரதம். இவ்வாறு தருமனுக்குச் சூதில் பற்று அதிகம் என்று காட்டியவாறு. ஆனால் இங்கு இப்படிக் கூறிவிட்டு முன் விசுவரூபவருணனையில் துரியோதனன் 'இதென்ன சாடி வித்தை' யென்று கூறிக் கண்ணனது தெய்வீகத்தை மறந்தானென்றால், இரண்டும் பொருந்துமாறு எங்ஙனம்? அதனால்தான் இக் கதாநாயகர்களுடைய பண்பை அத்தகைய மாறுபாடுகளில்லாத வில்லிபாரதத்தைக் கொண்டே ஆராய்வது.

டும், விதியை விலக்க இவனு லியலவில்லை. யாவற்றையும் தோற்றபின் பாஞ்சாலியையும்தோற்றான். பாஞ்சாலியைச் சபையில் இழுத்து வந்தனர். அப்போது தான் ஒருவருக்கும் சுயநிலையில்லை. விதுரன் வெம்பிப்புழுங்குகிறான். திருதராட்டிரன்மனமும் இருள் சூழ்ந்து நின்றது. துரியோதனனைப் பழிதீர்வெஞ்சினமும் பகையும் வெற்றியும் ஆட்டி நிற்கின்றன. விசயன் சிலைமேல் விழிவைக்க, வீமன் கதைமேல் கை வைத்தான். இப்படி ஒருவரும் மேல்நடப்ப தென்னவென்ப தறியாமல் அலைகைக்குலங்கள்போல் ஆடவும், துச்சாதனன் தனது பொல்லாங்கிசைபாடவும், வெள்ளத்தூடு செல்லும் மக்களைப்போல் சுயநிலையில்லா திருக்கவும், திரௌபதி,

மல்லார் திண்டோள் மாமாவோ
மந்தா கினியாள் மதலாயோ
எல்லா நெறியு முணர்ந்தவர்க்
கிதுவோ மண்ணில் இயல்பென்றாள்

என்றபடி, யாவருடைய இரக்கத்தையும் கவர்ந்து நிற்ப, வீடுமனும் "மௌனதேவியை மணந்தநமக்குத் தரும சங்கடம் நேர்ந்ததே" யென்று வியர்த்து, "நீ யுரைத்தவெல்லாம்அரசற்கு இயம்புதி" யென்றுபழி கழித்து நிற்ப, தருமன் ஒருவனே அறமென்னும் கயிறுபிடித்து நடக்கும் நிதானமறிந்து ஒழுகியவனாய்த் தம்பியரை அமர்த்தி நின்று, கொலைக்களமாக வேண்டிய இராசசபையைப் பொறைக் கோயிலாகவும் அறக்கோயிலாகவும் ஆக்கினான். தன் தம்பியரை அமர்த்தும் முகத்தால் இருதிறத்தாருக்கும் அறங் கூறுவான்,

தேம்போ தனைத்து மெய்சாயும்
சிலபோ தலரும் சிலபோது
வேம்போ தங்கு வாழ்வவெல்லாம்
வெங்கா னுடனே வேவாவோ
ஆம்போ தாகும் அதுவன்றி
ஆய பொருள்கள் அம்முறையே
போம்போ தனைத்தும் போமுன்னம்
பொறுத்தீ ரின்னம் பொறுமென்றான்.

விகர்ணனது அறவுரைகள் கர்ணனது உரைகளால் மறுக்கப்பட்டதும், துரியோதனன் பாண்டவர்கள் மேற்றுணியைக் கேட்ப, தருமனும் அவர்களது 'வாங்காத உத்திரியங்களை' வாங்கி யீந்தான். இதுவரையிலும், தன்னால் கூடியவரையில் அறத்தினைப் பாதுகாத்துத் தன் கடமையைச் செவ்வனே செய்த அற்புதமான மனத் திருப்தியுடன், பின்னால் வரக் கூடிய செயல்களின் பாரத்தைத் தனக் கப்பாலுள்ள கருணை மூர்த்தியின் மீதகற்றி அவரது அருளொளியை எதிர்பார்த்து நின்றனன். அவ்வணமே கருணை மூர்த்தியும் அருள் புரியவே, எதுதான் அழிந்தாலும் தன்னறம்அழியாதெனும் தன்கொள்கைவலியுறவே, தருமன் தன்னிலையோரைப்போல் சபதமொன்றும் மொழிந்தானல்லன். 'நாம் கடைபிடிப்பது அறம், நம்மை ஆள்வது விதி;எனினு மவ்விதி நமது அறத்தை அழிக்காது' என்பதில் அடங்கிய இருவிதமான கொள்கைகளில் ஒன்று மேல்நாட்டாரது நன்மையையே எதிர்பார்க்கும் கொள்கையென்றும், (Optimism) மற்றது எல்லாம் விதி வழியே நிகழுமென்னும் கீழ்நாட்டாரது விதிக்கொள்கை (Eastern Fatalism) என்றும் பிரித்துக்காட்டுவர் மேனாட்டு அறிஞர். ஆனால் நம்மைப் பொறுத்தவரையில் தருமனது மாண்பினில் இரண்டும் ஒன்றியிருப்பதால், அவர்கள் கூறிய வித்தியாசம் எனக்கு எட்டவில்லை.

துகிலுரிய முடியாமல் துச்சாதனன் சளைத்தான். பிறகு பாஞ்சாலியும் சபதம் கூற, தருமனது அகத்திலுள்ள அறவெற்றியின் மகிழ்ச்சியை யறியாமல், இளைஞர்களும் வஞ்சினம் கூறினர். திருதராட்டிரன் உத்பாதங்கள் சிலகண்டு நடுங்கி அவர்களது இராச்சியத்தைத் திருப்பிக் கொடுத்தான். கொடுத்ததை மீட்டுப் பின்னும் சூதாடக் கூறினான். உடனே தருமன் ஆடியதிலிருந்து நாம் இரண்டு விஷயங்கள் உண்மையெனக் கருதலாம். அக்காலத்தில் சூதாடுவது தவறல்ல வென்பதும், அதுவும் மூத்த தந்தையின் ஏவலின் படியே நடந்ததாதலின், தருமன் சூதாடியது அவனது அறக்கொள்கைக்கு விரோதமல்ல என்பதுமே. மீண்டும் சூதாடியதினின்றும்,தான், எத்துணைப் பிரமாதமான சந்தர்ப்பங்களிலும் தனது அறத்தைக் காப்பாற்றுதல் இயலும் என்னும் அவனுடைய திடநெஞ்சை நன்கு வியக்கப் போகாது. ஆதலின் சம்பவங்கள் நிறைந்த அற்றைநாட்பொழு தடங்கியதும், கோடையிற் பரிதியென்ன, சத்திய மொன்றைத் தவிர்த்து எல்லாம் களையப்பட்டு அவன்வெங்கானம் ஏகியபோது, மற்றோருடைய மாண்புகளெல்லாம் மங்க, கவிஞரும்,

நாட்டிடை எல்லை பொற்றாள்
நறுமலர் சிவக்க வேகிக்
காட்டிடை யுற்ற போதும்
கலக்கமற் றுவகை கூர்ந்தான்
கூட்டிடை இன்ப துன்பக்
கொழும்பயன் துய்த்து மாறி
வீட்டிடைப் புகுந்த போது
மெய்ம்மகிழ் விபுதர் போல்வான்.

என்று போரடங்கியதும் ஓசையடங்கிய நடுநிசியில் முழக்கும் வெற்றிச்சங்கின் ஒலியென்னக் கூறி யச் சருக்கத்தை முடிக்கின்றார். $

$இது இச்சருக்கத்தின் கடைசிப்பாட்டு;வில்லிபாரதத்தில் இச்சருக்கமே மிகப்பெரிய சருக்கம். பலவித நிகழ்ச்சிகளுக் கேற்பப் பற்பலவிதமான சந்தங்கள் பெருகிய இச்சருக்கத்தின் கடைசிப் பாட்டு இவ்வாறு உச்சஸ்தாயியில் முடிந்திருப்பது ஒரு கவியற்புதம். ஆனால் நாம் இங்கெடுத்துக்கொண்டது பண்பாராய்ச்சி. ஆதலின் இத்தகைய இலக்கிய நயங்களை இங்காராய்தல் இயலாது.

# அண்டங்கள்

[751-வது பக்கத் தொடர்ச்சி]

இனி அண்டங்களின் சொரூபமும் அணுவுக்கு அணுவிலும், மகத்துக்கு மகத்திலும் ஒருதன்மையுடனே விளங்குகின்றனவென்பது மேனாட்டுத் தத்துவ சாஸ்திரிகளின் முடிவாம். இயற்கையின் (Nature) இலக்கணத்தை உள்ளங்கை நெல்லிக்கனிபோல் உணர்ந்த நமது சமயகுரவர்களும், அம்முடிவுக்கே வந்திருந்தனர்.

"அண்டப் பகுதியின் உண்டைப் பிறக்கம்
அளப்பருந் தன்மை வளப்பெருங் காட்சி
ஒன்றனுக் கொன்று நின்றெழில் பகரின்
நூற்றொரு கோடியின் மேற்பட விரிந்தன.
இன்னுழை கதிரின் றுன்னணுப் புரையச்
சிறிய வாகப் பெரியோன் றெரியின்
வேதியன் றொகையொடு மாலவன் மிகுதியுந்
தோற்றமும் சிறப்பு மீற்றொடு புணரிய."



என்றார் மணிவாசகப் பெருமான்.

அண்டப் பகுதி என்று அவர் கூறியதில் அண்டமாவது யாது; அதன்பகுதியை என்னென்று கூறல் வேண்டும்;என ஆராய்வோமாயின், அண்டமென்பது ஒரு சக்தியின் ஆட்சிக்கு உட்பட்ட எல்லை என்பது விளங்கும். பார் (நமது பூமியானது)ஒரு அண்டமெனின் நமது பூமியின் ஆகர்ஷண சக்திக்கு உட்பட்ட எல்லையைப் பாரின் எல்லை-அண்ட மெனப்படும்-ஒவ்வொரு அண்டத்திற்கும் முகடு உண்டு. முட்டைக்கு மேல் ஒருமூடி யிருப்பதுபோல் ஒவ்வொருஅண்டத்திற்கும் ஒருவகைமூடி யுண்டு. நமது அண்டத்திற்கு ஒருமூடி உண்டா வென்று ஆராயப்புகின் அதற்கும் இருப்பதாகவே விஞ்ஞான சாஸ்திரம் நிரூபிக்கும். இப்பாரின் அண்டமுகடு ஒரு புரை யுடையதோ,அல்லது,பல புரைகளை யுடையதோ என்றுதிண்ணமாகக் கூறமுடியவில்லை. உலகத்திலிருந்து பிரயோகிக்கின்ற மின்சார சக்திகள் (Electro magnetic waves used in wireless, and Radio communication) வாயுமண்டல அளவிலேயே நிற்கின்றன. அவ் வாயுமண்டல எல்லையே அச்சக்திக்கு அண்ட முகடாக நிற்கும். இதைத்தான் ஹெவிசயிட் லேயர் என்று சொல்வார்கள். ("The heavyside layer consists of a shell of ionised layer which acts as a very good conductor. The Electro magnetic waves travelling over the surface of the Earth are encountered by those waves which are believed to be the result of reflection of the waves at the Heavyside layer. "Fading" is explained on these facts.-Greenwood) நமது பூமியின் ஆகர்ஷண சக்தியின் அளவை நோக்குவோமாயின் நமது பூமியின் அண்டமுகடு பல்லாயிரம் மயில்களுக்கு அப்புறம் செல்லும். அதுவே எரி நட்சத்திரங்களுடைய வீழ்ச்சியின் எல்லையாம். (Meteors or Fireballs are bright shooting stars, pieces of matter usually quite small *Which are attracted from the outer space into the Earth's atmosphere* when they become white hot through friction with air & they vaporise in air). இவ்வாறு நமது பூமியின் ஆகர்ஷணசக்திக்கு முகடு ஆகாசமாகிய அருவடிவமாக இருக்கின்றது. ஆதலால் நமது உலகத்திற்கும் அண்டமுகடு ஒரு புரையாகவோ, பல புரைகளாகவோ நிற்கின்றதென்பது திண்ணம்.

சந்திரனைக் காணும்போது சந்திர மண்டல ஆகர்ஷண எல்லையில் அதற்கு வாயுமண்டலம் காணப்படவில்லை (From the observations of the corona seen during a total eclipse of the sun.) ஆகையால் அதிலுள்ள ஜீவராசிகளுக்கு உயிர்ப்பு அநாவசியமாயிருக்கும். நமது உலகத்திலும் நீர் வாழ்வனபெரும்பாலும்மூச்சுவிடுவதில்லை.நீரிலுள்ள பிராணவாய்வைச் சேதித்துத் தேகத்திற்குப் பயன்படுத்துவன நாம் கண்டிருக்கிறோம். (The process of breathing is performed without effort; a current of water enters at the mouth of the fish passes over the gills & emerges at the gill slits). அவ்வாறே காற்றும் வேண்டாத, நீரும் பெரும்பாலும் வேண்டாத,பறைகொட்டும் தவளை பூமியில் வெகு ஆழத்தில் மண் மூடியிருக்கும். இந்தத்தவளையின் இலக்கணத்தைத் திருநாவுக்கரசு நாயனார் தேவாரத்திலும் காணலாம்.

"பைங்கால் தவளை பறைகொட்டப்
பாசிலை நீர்ப்படுகர்
அங்காற் குவளைமே லாவி
யுயிர்ப்ப அருகுலவும்
செங்காற் குருகிவை சேருஞ்
செறிகெடி லக்கரைத்தே
வெங்காற் குருசிலை வீர
னருள்வைத்த வீரட்டமே."

ஆதலால் சந்திர மண்டலத்தில் நம்மைப்போல் உயிர் உள்ளன.அதாவது மூச்சுவிடும் பிராணிகள் இல்லையாயினும், ஜீவர்கள் இல்லை யென்பதற்குப் போதுமான விஞ்ஞான சாத்திர ஆதரவு இல்லை. தென் மகாசமுத்திரத்தில் தட்சண துருவத்தின் எல்லையில் பனிக்கட்டிஉறைந்து ஓரேபனிப்பாறையாயிருக்கும். அத்தென்கண்டத்திலும் மனிதனைப் போன்ற பகுத்தறிவு சற்றேறக் குறையப் பெற்றிருக்கும் பெங்குயின்ஸ் (Penguins) என்னும் ஒருவகைப் பறவைகள் உள என்பது அவ்விடம் சென்ற மாலுமிகள் விருத்தாந்தத்தால் அறிகின்றோம். பனி உறையும் அளவுக்குக் ஐம்பது டிகிரி வரையிலுள்ள பெருங்குளிர்ச்சியினிப்பறவைகள் வசிக்கின்றன என்னவும், இவை நீர் வாழ்வனவா, நிலம்வாழ்வனவா என ஐயமுறக்கூடிய இலக்கணம் பெற்றன எனவும் காண்கின்றோம். இவ்வாறு பஞ்சபூதங்களைப் பற்பலவகையில் பயன்படுத்தும் ஜீவராசிகள்நமது உலகத்திலேயே காணலாமெனின் ஏனைய உலகங்களிலுள்ள ஜீவராசிகளின் தன்மை அளப்பரிய வளாமையதாய் இருக்குமென்பதை அனுமானிக்கலாமன்றோ?

நமது பூமியை விட்டு, சூரியசக்திகுறைந்த மண்டலங்களான அங்காரக கோளத்தில் (செவ்வாய்— Mars) உஷ்ணம் என்பதே பனிக்கட்டி உறையும் அளவுக்கு மேற்படுவது ஏகதேசமென ககோள சாஸ்திரிகள் விளக்குகின்றனர். (The equatorial regions of Mars are much colder than our Frigid Zones). ஆயினும் அதில் நம்மினும் பன்மடங்கு சிறந்த கல்வி பகுத்தறிவு நற்குண நற்செய்கைகள் வாய்ந்த ஜீவர்கள் வசிக்கின்றார்கள் என்பது ககோள சாஸ்திரங்களின் துணிபாம். (The canals in Mars show a great engineering skill); இதன்றியும் அதனில் வசிக்கும் ஜீவர்களிடம் அமெரிக்காக் கண்டத்து நிபுணர்களில்சிலர் மனச்சக்தியால் (Telepathy) சம்பாஷித்ததாய்த் தெரியவருகிறது.

இங்குள்ளவர் அங்குள்ளோருக்கும், அங்குள்ளோர் இங்கு உள்ளோருக்கும் விஷயங்களைப் பரிவர்த்தனை (Exchange) செய்யக் கருவிகளையும் கண்டுபிடிக்க முயன்று வருகின்றனர். ஆனால்நாம் இந்நாகரிகத்தில் பெற்ற மின்சாரம் (Electricity) கம்பியற்ற தந்தி (Radioandwireless) முதலியன அங்காரக உலக குடிகள் எக்காலத்திற்குமுன்போ பெற்றுவிட்டனர் என்றும், நமது நாகரிகம் அவர்களுக்கு ஒருதிரணம் என்றும் மேல்நாட்டு ஆராய்ச்சிகள் வெளியாக்குகின்றன. சூரியன் வெளிச்சத்தை எதிர்பாராத அண்டத்தில் இவர்கள் வசிக்கக் கூடுமெனின்; நமது உலகத்திலும் சூரியசக்தியின் ஆதரவு நீங்கலாகப் பிழைக்கும் வழிகளையும் அவ்வாழ்நாட்களினிலக்கணங்களையும் அமெரிக்ககண்டத்து விஞ்ஞானநிபுணர்சயென்டிபிக் அமெரிக்கன் (Scientific American) முதலிய பத்திரிகைகளின் வெளியாக்குவதைக்காணலாம். எனவே பல்லாயிர வருடங்களுக்குப் பின்னர் நமது இந்நில உலகம் அடையக்கூடிய நாகரிகத்தைச் செவ்வாய் மண்டல வாசிகள் இன்றே பெற்றிருக்கின்றனர் என்றும் அம்மண்டலத்தில் சூரிய உஷ்ணம் என்பது நமது வட துருவத்தில் சூரிய உஷ்ணம் எவ்வளவு காணலாமோ அவ்வளவு காணப்படுகின்றதென்றுங் ககோள ஆராய்ச்சியில் உணர்கின்றோம். அவ்விடத்திய சீதோஷ்ண நிலைமை சேக்கிழார் திருச்செங்கூரைப் பற்றிக் கூறமிடத்து வருணிக்கும் வர்ணனையை ஒக்கும் எனலாம்.

அளிக்குலங்கள் களித்தகல அரவிந்தம்
முகம்புலரப்
புளிக்குமணி மரகதவல் லியிற்கோத்த
பான்மையெனத்
துளித்தலைமேல் அறுகுபனி தொடுத்தசையச்
சூழ்பனியால்
குளிர்க்குடைந்து வெண்படாம் போர்த்தனைய
குன்றுகளும்,
மொய்பனிகூர் குளிர்வாடை முழுதுலவும்
பொழுதேயாய்க்
கொய்தளிர்மென் சோலைகளுங் குலைந்தசையக்
குளிர்க்கொதுங்கி
வெய்யவனுங் கரம்நிமிர்க்க மாட்டான்போல்
விசும்பினிடை
ஐதுவெயில் விரிப்பதுவும் அடங்குவதும்
ஆகுமால்.

—திருஞான சம்பந்த சுவாமியின் புராணம்.

இத்தகைய இலக்கணத்தினாலேயே செவ்வாய்க்கிரகத்தின் வர்ணம் சிவப்பாகக் காணப்படுகிறது (Red-morning rays). அங்கிருந்து நோக்கக்கூடிய வியாழமும் சந்திரனினும் பெரிதாகக் காணப்படும். உஷ்ணமும் சிறிது கொடுக்கலாம். அம்மண்டலத்தைவிட்டுப் போவோமாயின் பல்வகைச் சிறுகோள எல்லைக்குப் போகும்போது (The asteroids) எத்தனை மண்டலங்களில் [illegible] உளவோ என்பது நாம் அறியோம். ஆயினும் அவற்றின் சிலவற்றில் பகுத்தறிவு உள்ளன வசிக்கக்கூடும் என்பது திண்ணம். அவ்வெல்லை நீங்க இரண்டாவது சூரியனாய் ஒளியிலும், சக்தியிலும், உஷ்ணத்திலும், சிறந்து விளங்குவது தேவ குருவாகிய பிரகஸ்பதி எல்லை. வியாழ மண்டலமோ (Jupiter) சூரிய மண்டலம் போல் மிக்க உஷ்ணமுள்ள மண்டலம் (It is still white hot) அதனைச் சுற்றியோடும் எட்டுச் சந்திரர்கள் உள. அவையாவும் உயிருள்ள ஜீவர்கள் வசிக்கக்கூடிய பூமிகளாகக் காணப்படுகின்றன. அவ்வெல்லைக்குப் பின்னர்ச் சனி மண்டலம் காணப்படும். அதுவும் உஷ்ணமண்டலமே. (It is red hot). அதைச் சுற்றியோடும் சந்திரர்கள் நமது பூமியின் இலக்கணம் பெற்றிருக்கின்றன. (It has a ring unlike other planets. The ring is not composed of a solid block but by a number of particles) வியாழ மண்டலத்தினின்றும், சனி மண்டலத்தினின்றும் சூரியனைக் கண்டால் அது ஒரு நட்சத்திரம் போல் காணப்படும்.

இவ்வாறு சூரியனுக்கு அதிகதூரத்தில் செல்லச் செல்லக் கோளங்களும் அவற்றின் சந்திரர்களும் இருக்கும்நிலைமை உணர்ந்தோம். இனி, சூரியனுக்குச் சமீபத்தில் செல்லச் செல்ல இரண்டு கோளங்கள் காணப்படும். அவற்றில் ஒன்று சுக்கிரன் (Venus) மற்றொன்று புதன் (Mercury). சுக்கிரனுக்கு வட துருவத்திலும் நாம் வசிக்கத்தகுந்த குளிர்ச்சியில்லை. ஆப்பிரிக்காப் பாலைவனத்து உஷ்ணமும் (Sahara Desert) இக்கோளத்தில் செல்லக் கூடியவர்களுக்குப் பனிக்கட்டியின் குளிர்ச்சியென்றே சொல்லவேண்டும். ஆகையால் சூரியன் வெப்பத்தால் வாட்டப்பட்ட இக்கோளங்களில் வசிக்கக்கூடியவர்கள் சூரியனில் வசிக்கக்கூடியவர்கள் போலவே இருத்தல் வேண்டும். அதாவது எரியே பிராணாதாரமாகக் கொண்ட ஜீவர்கள்தான் இங்கு இயங்கக் கூடியவர்களாய் இருக்கின்றனர். இராமாயணத்திலே புத்திரகாமேஷ்டியாகத்தினின்று வெளிவந்த பூதமும், இந்திரஜித்து நிகும்பலையில் வெளிவரக்கூடிய ஜீவராசிகளும் மகாபாரதத்திலும் நச்சுப்பொய்கைக்குப் பாண்டவர்களைக்கொல்ல ஏவிய பூதங்களுமே இக்கோளங்களில் வசிக்க யோக்கியதை உடையன. பஞ்ச பூதங்களில் தீயையே வளர்ச்சிக்கும் இயக்கத்திற்கும் ஆதாரமாகப்பெற்ற ஜீவர்கள் இக்கோளங்களிலும் சூரியமண்டலத்திலும் வசிப்பர். நமது நாட்டில் சித்தர்கள் தமது தேகத்தைச் சித்திசெய்து எப்பூதமயமாகவும் மாற்றக்கூடியவர்களாயிருந்ததினால் அன்றோ தாயுமான சுவாமிகள்:—

“திக்கொடு திகந்தமும் மனவேக மென்னவே
சென்றோடி யாடி வருவீர்
செம்பொன்மக மேருவொடு குணமேரு என்னவே
திகழ்துருவம் அளவளவி
உக்ரமிகு சக்ரதர னென்னநிற் பீர்கையில்
உழுந்தமிழும் ஆசமனமா
வோரேழு கடலையும் பருகவல்லீர் இந்திரன்
உலகும் ஐராவதமுமே
கைக்கெளிய பந்தா யெடுத்து விளையாடுவீர்
ககனவட் டத்தை யெல்லாங்
கடுகிடை யிருத்தியே அஷ்டகுல வெற்பையுங்
காட்டுவீர் மேலும் மேலும்
மிக்கசித் திகளெல்லாம் வல்லநீ ரடிமைமுன்
விளங்கவரு சித்தியிலையோ
வேதாந்த சித்தாந்த சமரசநன் னிலைபெற்ற
வித்தகச் சித்தர் கணமே”

என்று புகழ்வார். இவர்களுக்குப் பஞ்சபூதக் கட்டு நினைத்த மாத்திரத்தில் உடையக் கூடியதும் அணைந்து கட்டக்கூடியதுமா யிருந்ததால், சோறி என்னும் ஒருவகை மீன் (Jelly fish) எவ்வித உருவத்தை எடுப்பினும் இறவாதிருக்குமோ அம்மாதிரி எப்பூதவடிவெடுப்பினும் இறவாதிருந்தனர். அதனால் அவர் [illegible] சூரிய மண்டல எல்லைமாத்திரமன்றுபற்பல சூரிய மண்டல எல்லைகளைக் கண்டு ஆங்காங்குள்ள வேடிக்கைகளையும், இன்பங்களையும் கண்டு அனுபவித்து, விளையாடி வந்தனர்.

நமது சூரியனே ஆகாயத்தில் காணப்படும் பல்லாயிர நட்சத்திரங்களில் மிகச்சிறியதாகியதொன்றே; ஒவ்வொரு நட்சத்திரமும் ஒவ்வொருசூரியனே. நட்சத்திரங்கள் இருவகை. அதாவது பெரியவை அல்லது பூத நட்சத்திரம் என்றும் (Giantstars) சிறியவைகுள்ள நட்சத்திரம் என்றும் (Dwarf stars) பிரிக்கப்பட்டிருக்கின்றன. இவைகளின் ஒளிக்குத்தக்கவாறு நீல நட்சத்திரம் (Blue stars) சிவப்புநட்சத்திரம் (Red stars), வெள்ளை நட்சத்திரம் (White stars) மஞ்சள் நட்சத்திர மென்றும் (Yellow stars) பிரிக்கப்பட்டிருக்கின்றன. அவைகளில் நீலம் புதியதாகப் பிறந்தவை என்றும், உஷ்ணம் அதிகம் உள்ளவை என்றும், நாட்கள் செல்லச்செல்ல அவை மேற்சொன்னவாறு ஒளி மழுங்கி உஷ்ணமும் குறைந்து முறையே சிவப்பாகமாறி அது வெள்ளையாகவும், மஞ்சளாகவும் மாறுகின்றன என்றும் தற்கால ககோள ஆராய்ச்சிசெய்கின்ற விஞ்ஞான சாஸ்திரம் (Astro-physics) கூறும். இந்தமுறையிலே நமது சூரியன் எத்தன்மையது என்று பார்க்கப் புகுவோமாயின் அது ஒரு மஞ்சள் நிறமான, குள்ள நட்சத்திரமாகக் காணப்படுகிறது. (The sun in a yellow dwarf star) இது இவ்வாராய்ச்சிக்காரர்களின் கணக்கின் பிரகாரம் இன்னும்கொஞ்சகாலத்திற்கெல்லாம் (Several Light Years - நமக்கு அநேக காலமாயிருப்பினும் அவைகளின் ஜீவகாலத்தில் இதுஒரு சிறிய காலம் எனவே குறிப்பிடவேண்டும்.) கருப்பு நட்சத்திரமாக (Black Star) மாறிவிடும். அமாவாசை இரவில் நல்ல வைரக்கல்போல் நீல நிறத்துடன் ஜொலிக்கும் நட்சத்திரங்கள் நமது சூரியனின் பல்லாயிரம் மடங்கு பெரியவை. அவை வெகுதூரத்திலிருப்பதால் அம்மாதிரி காணப்படுகின்றன. தூரமென்பது சாதாரணமான நீட்டல் அளவையில் காட்டக்கூடியதல்ல. வெளிச்சமானது ஒரு விநாடிக்கு (One Second) 1,86,000 மைல் தூரம் செல்லுகின்றது. நமது சூரியனிடத்திருந்து வெளிச்சம் நமக்கு வர, சுமார் 8 நிமிஷங்கள் எனின், எத்தனை கோடி மைல் தூரத்தில் அது இருக்கின்றதென்று நீங்கள் அனுமானிக்கலாம். நமக்கு மிகவும் சமீபத்தில் இருக்கும் நட்சத்திரத்தினின்று நமக்கு வெளிச்சம் வரச் சுமார் மூன்று வருஷம் (Light Years) பிடிக்கிறதென்றால் அது நமக்கு எவ்வளவு தூரத்திலிருக்கும் என்பதைக் காணலாம். சில நட்சத்திரங்களின் வெளிச்சம் வர ஆயிரக்கணக்கான வருடங்கள் பிடிக்கின்றன என்பது வானசாஸ்திரிகளின் துணிபு. இதன்றியும் நட்சத்திரங்கள் இன்னும் உற்பத்தியாய்க்கொண்டே இருக்கின்றன. இவ்விடங்கள் கருத்த புகைபோல வானத்தில் காணப்படும். இவையே நெபுலே (Nebutlac the birth-place of stars) எனப்படும். இவை வானத்தில் ஏழு அல்லது எட்டு இடங்களில் காணப்படும்.

ஆகையால் நட்சத்திராசி சூரியர்கள் தன்னைச் சுற்றியோடும் கோளங்களுடன் நமது சூரிய மண்டலம் போவது போலவே ஓடிக்கொண்டு இருக்கின்றன. இவை ஒன்றோடொன்று மோதாமல் ஒழுங்காய்ச் செல்வதைநாம் கவனிப்போமாயின் இச்சூரியர்களையெல்லாம் ஆட்டிவைக்கும் ஒருமத்தியசக்தி உண்டென்றே அனுமானிக்க வேண்டியதாயிருக்கிறது. கணக்கிடக்கூடாத வேகமாகச்செல்லும் இவற்றை ஒழுங்கில் நிறுத்தி வேகத்தைத் தடுத்தாட்கொள்கின்ற ஒப்பற்ற ஒரு முதல் சக்தி உண்டென்பதை எண்ணியோ மணிவாசகப் பெருமான்

“வேகங் கெடுத்தாண்ட வேந்தன் அடிவெல்க”

என்றார்.

சிவபெருமானுக்கு, போக வடிவு, யோக வடிவு, வேக வடிவு என மூன்று வடிவுகள் உண்டு என்பது மேலோர் துணிபு.

ஓரார்.

“போகியா யிருந்துயிர்க்குப் போகத்தைப் புரிதல்
யோகியா யோக முத்தி உதவுதல் அதுவும் ஓரார்
வேகியா னற்போற் செய்த வினையினைவீட்டலோரா
ஊகியா மூடரெல்லாம் உம்பரின் ஒருவனென்பர்.

சிவஞான சித்தியார்—முதற்சூத்திரம்.

ஆயுர்வேத வித்வான் B. V. பண்டிட்ஸ் நஞ்சன்கூடு “சத்வைத்யசாலை” மருந்துகள்
“ஆல்மண்டைக்” (டானிக்). “பாலக்ஸ்” பேதிமாத்திரை. “ஸ்ப்ளிவரால்” (குழந்தை கட்டிக்கு)
சுமார் 300 போலிகள் ஏமாற்றும். டெச்யாவனப்ராசா மடபிருங்காமலகதைலம் கோரோஜனை மாத்திரை தயவுசெய்து கவனித்து வாங்கவும்.
“நஞ்சன்கூடு பல்பொடி”
காலட்ரங்கள்
[பண்டிதர்கள் வைத்தியர்களுக்கு மட்டும்]
199198

KALANILAYAM
REG. NO. M. 2324.

## வர்த்தமானம்

பாம்பு தின்றால் பல்லாண்டு வாழலாம்:—ஜப்பானியர்களில் அநேகர் பாம்பு மாமிசத்தைத் தின்று என்றும் இளைஞர்களாகவும் திடகாத்திரர்களாகவும் வாழ்கிறார்கள். ஜப்பான் தேசத்தில் பாம்பு வியாபாரம் செய்யும் கடைகள் இருநூற்றுக்குமேல் இருக்கின்றனவாம். பாம்பு மாமிசத்தை ஜப்பானியர்கள் கணக்கின்றி உண்டுவருகின்றார்கள். இன்னும் ஜப்பானியர்கள் பாம்பினால் அநேக நன்மைகளை அடைகின்றார்கள். பாம்புகளிலிருந்து ஒருவிதச் சாராயமும் செய்யப்பட்டுவருகின்றது. இந்தச் சாராயத்திற்கு ஜப்பானில் அதிகக்கிராக்கி இருந்துவருகின்றது. பாம்புச் சாராயத்திற்கும் பாம்பு மாமிசத்திற்கும் சில விஷப் பாம்புகள்கூட உபயோகப்படுகின்றனவாம்.

* * *

மனச்சாட்சி:—அமெரிக்கா பிலடால்பியாவில் ஒருவர் நகரசபைக்குத்தான் செலுத்தவேண்டிய வரியைச் செலுத்தாமல் திருட்டுத்தனமாகத் தப்பிக்கொண்டு வந்தார். ஒருநாள் அவர் கோயிலுக்குப் போனபொழுது அங்கிருந்த பாதிரியார் மனச்சாட்சிக்குவிரோதமாக நடக்கக்கூடாதென்று உபதேசம்செய்தார். உபதேசம் அவர்உள்ளத்தில் பதிந்து வருத்தியது. உடனே அவர் அந்தப்பாதிரியாருக்குநூறுபோன் நோட்டு அனுப்பி நகரசபை வரிக்காகக் கொடுத்து விடும்படி வேண்டிக்கொண்டார்.

* * *

எழுதப் படித்த எலிகள்:—தெற்கு பொகீமியாவில் ஜோசப் நோவன்றி என்பவர் இரண்டு எலிகளுக்கு எழுதப் படிக்கக் கற்றுக் கொடுத்திருக்கிறார். அவை மையில் கால்களைத் தொட்டுப் புள்ளி கோடு முதலியவைகளை எழுதுகின்றனவாம். இவர் மிருகங்களைப் பழக்கும்வதில் பேர்போனவராம். ஒரு காலத்தில் இவர் சிங்கங்களைக் கூடப் பழக்கினாராம்.

ரொமேனியா நாட்டில் வாஸ்நோஸ்டி யென்னும் ஊரைச்சேர்ந்த ஒருமனிதன் பொருள்சேர்க்குமாறு புதிய வழி ஒன்று கண்டுபிடித்துக் கையாண்டான். பணக்காரிகளான மாதர்களை ஒவ்வொருவராகமணப்பதும், அவர்கள்பணத்தையெல்லாம்செலவிட்டபின் அவர்களைக் கைவிடுவதுமாயிருந்தான். இவ்வாறு அவன் எண்பது மாதர்களைக் கலியாணம் செய்து கைவிட்டுவிட்டானாம். சுமார் 150 மாதர்களுடன் கலியாண ஒப்பந்தம் செய்துகொண்டானாம். இவனுடைய தந்திரம் வெளியாகிவிடவே போலீசார் அவனைக் கைதிசெய்திருக்கிறார்கள். இவனிடம் ஒரு ஜெர்மன் இளவரசியும் மோசம் போனாளாம்.

* * *

ஆளுக்கு 18 ஏக்கர்:—உலகத்தில், மூன்றில் இரண்டு பங்கு நீரும் ஒருபங்கு நிலமுமாக இருக்கிறது. இந்த நிலத்தை உலகத்திலுள்ள அனைவருக்கும் சரிசமமாகப் பங்கிட்டுக்கொடுத்தால் இன்று பிறந்த குழந்தைக்குக்கூடப் பதினெட்டு ஏகர் வீதம் நிலம் கிடைக்குமாம்.

* * *

விநோத விபத்து:—ஒரு கப்பல் உத்யோகஸ்தர் கப்பலின் மேல்தளத்தில் நின்றுகொண்டிருந்தார். திடீரென்று சமுத்திரத்திலிருந்து ஒரு அலை தோன்றி அவரை அப்படியே கடலுக்குள் அடித்துக்கொண்டு போய்விட்டது. அடுத்த நிமிஷத்தில் மற்றொரு பெரிய அலை அடித்தது; அது அந்த உத்தியோகஸ்தரைத்திரும்பவும் கப்பல் தளத்தில் கொண்டுவந்து தள்ளியது. இதனால் உத்யோகஸ்தருக்கு ஒரு கஷ்டமும் இல்லை. ஆனால் அவரது போலிப்பற்களும் ஒரு தங்கக் கெடிகாரமும்மட்டும் தவறிப் போய்விட்டன.

NATIONAL
INSURANCE COMPANY, LIMITED.
Head Office:
NATIONAL INSURANCE BUILDING,
362, China Bazar Rd, Esplanade, Madras.

1933 Results.

New Business Completed
exceeds ... ... Rs. 1,67,00,000

The Company with a steady progress all round.
All forms of life assurance policies issued at low safe rates of premium.

Specialities.

Female Lives
Joint Lives
Permanent Protection Policies
Triple Benefit Policies.
Marriage & Future Provision Policies.

For agencies please apply to:—

Branch Secretary,
362, China Bazar Road,
Esplanade, Madras.
OR
R. G. DAS & Co.,
*Managers.*

Consult
NATIONAL FIRE
AND
GENERAL INSURANCE COMPANY Ltd.,
Head Office:—
NATIONAL INSURANCE BUILDING,
362, China Bazar Rd, Esplanade, Madras.
for Fire, Motor & Accident policies.

A sound Company.
Please apply for particulars to:—

Branch Secretary,
362, China Bazar Road,
Esplanade, Madras.
OR
R. G. DAS & Co.,
*Managers.*

யுனைடெட் இந்தியா
லைப் அஷ்யுரன்ஸ் கம்பெனி, லிமிடெட், சென்னை.
ஹெட் ஆபீஸ்:—சென்னை. 1906ல் ஸ்தாபித்தது.
யுனைடெட் இந்தியாவில், லைப் இன்ஷுயரன்ஸின் சிறந்த பயன்கள் குறைந்தசெலவில் கிடைக்கும்.
யுனைடெட் இந்தியாவில் பாலிஸி எடுத்துக்கொள்வது மிகச்சிறந்த இன்வெஸ்ட்மெண்டும், வயது காலத்திற்கும் குடும்பத்திற்கும் இணையற்ற ஆதரவும் ஆகும்.
யுனைடெட் இந்தியாவே, தென்னிந்தியாவில் மற்றெல்லாக் கம்பெனிகளுக்கும் முன்னால் ஸ்தாபித்தது.
யுனைடெட் இந்தியா முற்றிலும் பத்திரமானதும் கெட்டிதிட்டமுடையதும் ஆன கம்பனி.

ஹெட் ஆபீஸ்:— செம்புதாஸ் தெரு, சென்னை. அல்லது இந்தியா, பர்மா, ஸிலோனில் உள்ள பிராஞ்சுகள்

இவைகளுக்கு எழுதி முழு விவரமும் இது பற்றிய பிரசுரங்களும் பெற்றுக்கொள்ளலாம்.

சிறந்த பலவிருத்தி ஔஷதம்
சென்ற 53 வருஷங்களாகப் பேரும் புகழும் பெற்று உலாவி வருகின்றன.

ஆதங்க நிக்ரஹ மாத்திரைகள்

மலச்சிக்கல், தேகஅசதி நரம்புகளின் தளர்ச்சி, ஞாபகக் குறைவு முதலிய வியாதிகளைக் கரஸ்தமாகக் கண்டிக்கும்.

32 மாத்திரைகளடங்கிய டப்பி 1-க்கு விலை ரூ. 1

இனும்! "காம சாஸ்திரம்" இனும்!!

ஆதங்க நிக்ரஹ ஔஷதாலயம்,
26 பிராட்வே, மதராஸ்.